812

M. 18

8 - NOV 1923

ம. சலவை செய்
ம்போகாது திரைந்து
கள் சாயம் போகாது.
ரகளி லிருக்கிறது. காஞ்சி
கோயமுத்தூர், நெல்லூர் முதலிய
கிற நூல் வஸ்திரங்களுக்குப் போடப்
கிற கரைகளைப் போன்ற கரைகளும் வேறு
புது மாதிரிகளும் எங்கள் வெண்பட்டு அங்க வஸ்திரங்களில்
பார்க்கலாம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 முழம் | 36 இஞ்சு | பட்டு | 1-க்கு | ரூ. 6-8 | முதல் | 9-8 | வரை |
| 5 ,, | 44 | ,, | 1-க்கு | ,, 11 | ,, | 15 | ,, |
| 6 ,, | ,, | ,, | 1-க்கு | ,, 13-8 | ,, | 25 | ,, |

---

## கலர் சில்க் அங்கவஸ்திரம்

(சரிகைக் கரையுள்ளது.)

கரைகள், கிளாவர், கம்பி பார்டர், உடல் நைஸாகவும் அழுத்தமாகவும் இருக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 முழம் | 44 இஞ்சு | 1-க்கு | ரூ. 15 | முதல் | 20 | வரை |
| 6 ,, | 44 ,, | 1-க்கு | ,, 20 | ,, | 30 | ,, |
| 6 ,, | 50 ,, | 1-க்கு | ,, 25 | ,, | 30 | ,, |
| 6 ,, | 54 ,, | 1-க்கு | ,, 30 | ,, | 40 | ,, |

---

## நியூ மாடல் ரவிக்கை.

அழகிய சிறிய ஜரிகைக் கரை. பலவித இங்கிலீஷ் கலர்கள்.

விலை ரவிக்கை 1-க்கு ரூ. 3-8.

**கே. எஸ். முத்தையா & கம்பெனி,**

சில்க் அவுஸ், காசி.

ஹரா பார்வதி.

8 - NOV 1923

ஸ்ரீ

# லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை
சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௧. ருத்ரோத்காரி௵ ஐப்பசி௴ 1923 அக்டோபர் இதழ் ௩.

## அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மி துதி ... ... | 99 |
| 2. | இராமாயண கூடார்த்தம் ... ... | 101 |
| 3. | பிரபஞ்ச ரகசியம் ... ... | 106 |
| 4. | புத்துயிர்ப் பத்து ... ... | 112 |
| 5. | சந்திரா ... ... | 114 |
| 6. | ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ... | 125 |
| 7. | மகான்களின் திருவாக்கு ... ... | 130 |
| 8. | மனோன்மணீய வசனம் ... ... | 133 |
| 9. | ஜவுளி வியாபாரம் ... ... | 140 |
| 10. | உலகப் போக்கு ... ... | 144 |
| 11. | ஹாஸ்யத் துணுக்குகள் ... ... | 146 |
| 12. | நகைகள் தரித்தல் ... ... | 147 |


சித்திரப் படங்கள்.


1. ஹரா பார்வதி
2. மதுரை வண்டியூர் தெப்பக்குளம்

21033
சென்னை 600 008

# லக்ஷ்மி

சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 2. |
| வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட | சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு | ரூ. 2-8. |
| உயர்ந்த பதிப்பு (Art Paper) ... | ... | ரூ. 10 |

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 15. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி மாதமும் முதல் தேதியில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.


## குஞ்சம் கட்டின பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு x 40 1 க்கு ரூ. 12, 14, 16, 18.

## ஜரிகைக் கரை நூல் புடவைகள்

நைஸான உடல், தினப்படி துவைத்துக் கட்டக்கூடியது. கரைகள் இரண்டுக்கும் ஜரிகைக் கம்பி போட்டு முகதலை 1 ; 1½ இஞ்சி ஜரிகையுள்ளது. கருப்பு, சிகப்பு, அரக்கு, புளு, மேகவர்ணம் முதலிய பல கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு. x 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12.

ஷை பெங்களூர் புடவை மாதிரி நாலு ஜரிகைக் கரைகள் போட்டது ரூ. 17, 18, 20.

கே. எஸ். முத்தையா அண்டு கோ., மதறாஸ்.

8 - NOV 1923

ஓம்

# லக்ஷ்மி துதி

பொன்னரசி, நாரணனூர்
தேவி, புக ழரசி,
மின் னு நவரத்தினம் போல்
மேனி அழகுடையாள்,
அன்னை யவள் வைய மெலாம்
ஆதரிப்பாள் சீதேவி
தன்னிரு பொற் றாளே
சரண் புகுந்து வாழ்வோமே.

பாரதி.

## லக்ஷ்மி

உலகம் புரக்கும் பெருமான்தன்
உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை அளிக்கும் பேரின்ப உருவே!
எல்லாம் உடையாளே!
திலகஞ் செறிவாள் நுதற் கரும்பே!
தேனே! கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே
தித்தித் தெழுமோர் தெள்ளமுதே!

மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே!
என் கண் மணியே! என்.
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே!
ஞான மணி விளக்கே!
சல கந்தரம் போற் கருணை பொழி
தடங்கட் டிருவே! கணமங்கைத்
தாயே சரணம்! சரணம்! இது தருணம்!
கருணை தருவாயே! ராமலிங்கர்.

---

# பிள்ளைத் தமிழ்.

எள்ளத் தனைவந் துறு பசிக்கும்
இரங்கிப் பறந்து சிறு பண்டி
எக்கிக் குழைத்து மணித் துவர்வாய்
இதழைக் குவித்து விரித் தழுது
துள்ளித் துடித்துப் புடை பெயர்ந்து
தொட்டில் உதைந்து பெரு விரலைச்
சுவைத்துக் கடைவாய் நீ ரொழுகத்
தோளின் மகரக் குழை தவழ

மெள்ளத் தவழ்ந்து குறு மூரல்
விளைத்து மடியின் மீ திருந்து
விம்மிப் பொருமி முகம் பார்த்து
வேண்டும் உமையாள் களப முலை
வள்ளத் தமுதுண் டக மகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே!
வளரும் களபக் குறும்பை முலை
வள்ளி கணவா வருகவே! பகழிக்கூத்தர்.

8 - NOV 1923
MADRAS

# இராமாயண கூடார்த்தம்

ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக ஸ்வாமிகள் எழுதியது.

இவ் வுலகத்தின்கண் உத்தம ஜந்மமாகிய மனித ஜந்மம் வாய்க்கப் பெற்று வாழும் ஜீவர்களுள், ஸப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் பஞ்ச விஷயங்களிலும் உழன்று, தமக்கெப்போதும் துக்கமே ப்ராப்தியாயினும் அதனை ஸுகமாய்க் கருதி, அறிவிழந்து திரியும் பாமரர்களையும், அநித்யமான அவ்விஷயங்களில் இந்த்ரியங்கள் செல்லவொட்டாமல் தடுத்தும், மனதை ஒருவழிப் படுத்தியும், ஸுத்த, புத்த, நித்த ஸ்வரூபராயும், ஸர்வ பரிபூரணராயும் விளங்காநின்ற ஸாக்ஷாத் பகவானுடைய பாதாரவிந்தங்களை யடைந்து, அவரையன்றிப் பிறிதொரு பொருளையும் இப்ரபஞ்சத்தின்கண் காணாது, தமக்கு ஸ்வபாவமாயுள்ள நித்திய திருப்தியில் இறுமாந்திருக்கும் ஜீவன் முக்தர்களையும் தவிர்த்து, 'நான் யார்? என்னுடைய ப்ரவர்த்தியென்ன? எனது ஸ்தானம் எது?' என்பவை முதலாய கேள்விகளிற் புகுந்து, தமக்கு நேரிட்டிருக்கும் முத் தாபங்களின் கொடுமையைச் சாந்தி பண்ண முயலும் பக்குவர்கள் அவர்களுடைய எதாஸ்தான மாகிய மோக்ஷமென்னும் நித்ய ஸுகத்தை அடையும் பொருட்டு ஹிதிகாச புராணாதிகள் எழுதிவைக்கப்பட் டிருக்கின்றன. மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதனம் ஞானமே யாதலின் வேதமுதல் புராணம் இறுதியாகவுள்ள ஸகல நூல்களும் ஞானத்தையே விசேஷித்துக் கூறுகின்றன. அவைகளின் அந்தரார்த்தத்தை க்ரகிக்க அறியாத சிலர் பாஹ்யார்த்தத்தை மாத்ரம் க்ரகித்தும், வேறு சிலர் அவைகளிற் சொல்லப்பட்ட கதைகள் மிகவும் கெட்ட கதைகளென்று நிந்தித்தும் வருகிறார்கள்.

ஸுத்தமான ஹிர்தயமும் நல்ல விவேகமும் உடைத்தாயிருந்தா லொழிய சாஸ்திரங்கள் என்னும் கடலிற்

புகுந்து வெளிவருதல் அரிதாகலின் அவைகளை விசாரிக்க யத்னிக்கும் மாந்தர் அவைகளின் ஸூக்ஷ்மார்த்தங்களை நன்குணர்ந்த ப்ரம்ம ஞானிகளிடத்தில் கேட்டுணர்தல் தகுதியாம்.

ஹிதிகாசங்களுள் ஒன்றாகிய இராமாயணத்தில், இராஜநீதி, கற்புலக்ஷணம், ஸஹோதர வாத்ஸல்ய நேர்மை, துஷ்டர்களின் கதி முதலிய பல விஷயங்கள் அதிநுட்பமாயும் மிக விஸ்தாரமாயும் ப்ரஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றனவன்றோ? ஸாதாரண ஜநங்கள் லௌகீக தர்மத்திற்குரியதான இவ்விஷயங்களை அறிந்தொழுக வேண்டி இவையாவும் ஸ்ரீ வால்மீகி ரிஷியாற் சொல்லப்பட் டிருக்கின்றன. இவை இராமாயணத்தின் பாஹ்யார்த்தமே யொழிய அந்தரார்த்த மன்று. அந்தரார்த்தம் இன்னதென அத்யாத்ம இராமாயணத்தில் விரிவாய் எழுதப்பட் டிருக்கின்றது. அதனை ஒருவாறு சுருக்கி இவ்விடத்தில் கூறுதும்.

மோக்ஷமென்று சொல்லப்பட்ட அயோத்தியா நகரத்தில், ப்ரம்மமென்னும் தஸரத சக்ரவர்த்தி ஞானசக்தி, இச்சாசக்தி, க்ரியாசக்தி யென்னும் கௌசலை, ஸுமித்திரை, கைகேசி யென்று சொல்லப்பட்ட பத்னிகளோடு கூடிவாழுங் காலத்தில் ஞான சக்தியென்னும் கௌசலையின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீராமர் உதித்தார். அவ்யக்தமென்னும் பால்யதசையால் தன்னை மறந்து, அஞ்ஞான மயனாகிய ஜீவனேதானாகி, ச்ரவணமென்னும் வசிஷ்டரை யடுத்து, மனனமென்னும் விஸ்வாமித்ரரைப் பின்றொடர்ந்து, வைராக்யமென்னும் இலக்ஷ்மணனோடு கூடிச் சென்று, ஆத்மா (இராமன்) என்னும் பரமேஷ்டி, ஞானமென்னும் பாணத்தைச் சந்தானஞ்செய்து, ஆவரணமென்னும் தாடகையின்மேல் ப்ரயோகித்து ஸங்காரஞ்செய்தும், இச்சையென்னும் மாரீசனைப் பயப்படுத்தி "இனி நீ யென்னை யெதிர்த்தால் மரிப்பாய்" என்று சொல்லி ஓடச் செய்தும், விபசாரமென்னும் பாறையை மிதித்து ஆசாரமென்னும் அகலிகையைத் துதித்தும், ஏகாந்தமென்னும் மிதிலையிற் ப்ரவேசித்துச், சாந்தமென்னும் ஜநக மஹாராஜாவை யடுத்து ஆநந்தமென்னும் ஜாநகியைப் பாணிக்ரகணஞ் செய்தும், மதம் என்னும் பரஸுராமனை யெதிர்

த்து, அம் மதத்தின் வ்ருத்தி இனி ஒருகாலத்திலும் தலையெடுக்காம லடக்கி, மோக்ஷமென்னும் அயோத்தியிற் சென்று 'தான் ஜீவனல்லன்' என்றறிந்து, ப்ரம்மமென்னும் தசரதனைத் திரும்பவும் அடுத்தும், ஜீவப்ரம்மைக்கியம் என்னும் பட்டாபிஷேகஞ் செய்தற்பொருட்டு வேண்டுங் காரியங்கள் நடக்குங் காலத்தில் க்ரியாசக்தியென்னும் கைகேசியினுடைய சலன மென்னும் தாசி வந்து கூடி ப்ரம்ம மென்னும் தசரதனிற் பிரித்தாள். பின்னர் ஆத்மா வென்னும் ஸ்ரீராமர் வைராக்ய மென்னும் இலக்ஷ்மணனோடும் ஆநந்த மென்னும் வைதேகி (ஸீதை) யினோடும் கூடி, சித்த மென்னும் ஸரயுநதியைக் கடந்து, புத்தி யென்னும் குகனுடைய ஆச்ரமத்தை யடைந்து, விக்ஷேப மென்னும் வனத்தில் நடந்து, தவம் என்னும் சித்ர கூடத்திலிருந்து, அகங்கார மென்னும் விராதனைக் கொன்று, மநம் என்னும் காகாஸுரனுடைய ஸங்கற்ப மென்னும் கண்ணினைக் குத்தி, நிர்விகற்பம் என்னும் கண்ணினைத் திறந்தார். அப்பால் வீர்யம் என்னும் அகஸ்தியரைக் கண்டு தைர்ய மென்னும் அஸ்திரம் பெற்றுக் காமம் என்னும் சூர்ப்பநகியைத் தண்டித்து, ஆகாம்ய மென்னும் கரதூஷணாதிகளைக் கண்டித்து, இச்சையென்னும் மாரீசனேதுவால் ஆநந்த மென்னும் ஸீதையைப் பிரிந்த பொழுது இராஜசம் என்னும் இராவணன் வந்து ஆநந்த மென்னும் ஸீதையை அபஹரித்து, ஸுகமென்னும் ஸீதையைத் துக்கமென்னும் இலங்கையிற் கொண்டுவைத்து, அஸுத்த வாசனைகளென்னும் ராக்ஷசர்களைக் காவலாக்கி, விசார மென்னும் அசோக வனத்தில் இருத்தினன்.

இச்சை யென்னும் மாரீசனைப் பின்றொடர்ந்து சென்ற ஆத்மா வென்னும் ஸ்ரீராமர் அவனை நிராசை யென்னும் பூமியில் புதைத்து விட்டுத் திரும்ப வந்து பார்த்த பொழுது ஜாநகியைக் காணாததால் விசனப் பட்டு, வைராக்கியமென்னும் இலக்ஷுமணனோடுகூட விக்ஷேப மென்னும் காட்டில் திரிந்து, சிந்தனை யென்னும் கவந்தனைக் கொன்று, ஸந்தோஷ மென்னும் சவரிமலையிற் சென்று, நிதித்தியாச மென்னும் ஹநுமானைத் தூதனை யடைந்து, ஆநந்த மென்னும் ஸீதையைச் சிந்தித்து,

ஜநன மென்னும் சப்த தருக்களையுஞ் சேதித்து, பயம் என்னும் வாலியின்மேல் அஸ்திரசந்தானம் செய்து, அபய மென்னும் ஸுக்ரீவனை ரக்ஷித்து, ஸுத்த வாஸனை யென்னும் ஹநுமானை ஸ்தோத்திரஞ் செய்து, மோக மென்னும் ஸமுத்திரத்தைக் கடந்து, லோப மென்னும் இலங்கணியை வதைத்து, அஸுத்த வாசனை யென்னும் ராக்ஷதரைச் சின்னபின்ன மாக்கி, ஆநந்த மென்னும் ஸீதையைக் கண்டு உல்லாஸ மென்னும் அநுபூதி பிறந்து, விசார மென்னும் அசோக வனத்தை நாசமாக்கி, அஞ்ஞான மென்னும் மாலியவானை நசிப்பித்து, சந்தேக மென்னும் அக்ஷய குமாரனை ஜயித்து, விபரீத மென்னும் இந்த்ர ஜித்தை யகற்றி, மயக்க மென்னும் பாசத்தினை யறுத்து, இராஜஸ மென்னும் இராவணனை யெதிர்த்து, மௌன மென்னும் அக்கினியை ஜொலிப்பித்து, துக்கமென்னும் இலங்கையைத் தஹிப்பித்து, மோக மென்னும் வாரிதி யைப் பந்தித்து, திடமென்னும் ஆச்ரமம் கட்டினார். உடனே சாத்விகம் என்னும் விபீஷணன் வந்தடுத்தான். பின்னர், தாமஸ மென்னும் கும்பகர்ணனைச் சேதித்து, இராஜஸ மென்னும் இராவணனைப் பயப்படுத்தி, விபரீத மென்னும் இந்த்ரஜித்தைத் தொடர்ந்து, மயக்க மென்னும் பாசத்தால் பந்திக்கப்பட்ட வைராக்ய மென்னும் இலக்ஷ் மணன் மோகாலசிய மடைந்த பொழுது நிதித்தியாச மென் னும் ஹநுமான் நிஷ்டை யென்னும் ஸஞ்சீவியைக் கொண்டு வந்து வைராக்ய மென்னும் இலக்ஷ்மணனுக்குப் போத மூண்டாக்கியபின் விபரீத மென்னும் இந்த்ரஜித்தைக் கொன்றார். அப்பொழுது ஸஞ்சித மென்னும் மூலபலப் படைகள் படும்படியா யெதிர்த்து, தீர மென்னும் மோக ஞஸ்திரத்தால் அஸுத்த வாஸனை யென்னும் ராக்ஷதர் கள் ஹதமானார்கள். ஆகவே ஸுத்த வாஸனைகள் என்னும் ஸ்ரீராமர் கெம்பீரம் என்னும் கோதண்ட மெடுத்து இராஜஸ மென்னும் இராவணனை யெதிர்த்து, ஞான மென்னும் பாணந் தொடுத்து அக மென்னும் கலசத்தை யுடைத்து, தசேந் த்ரியங்க ளென்னும் பத்துச் சிரசுகளையுஞ் சேதித்து, ஆநந்த மென்னும் ஸீதையைக் கண்டு, மௌனக் னியில் அவளை ஸ்நானம் செய்வித்து, அவளோடு சேர்ந்து மோக்ஷ மென்னும் அயோத்தியிற் ப்ரவேசித்து, ஜீவப்ரம

மைக்கியம் என்னும் மகுடாபிஷேகம் கைக்கொண்டு ப்ரம்ம மென்னும் தஸரதனே தானுகி மோக்ஷமென்னும் அயோத்தி நகரத்திற்குப் பதியாகி கேவல கைவல்லிய ப்ரம்மாநந்த ஸ்வரூப ஸாக்ஷாத்காரமாய்ப் ப்ரகாசித்தார்.

தஸரத ராமரது சரித்திரம் கூறும் நூலாகிய இராமாயணத்தில் இத்தகைய மேலான ஞானர்த்த மொன்று உள்ளடங்கி யிருத்தல் போலவே சகல ஹிதிகாச புராணங்களிலும் ஸாதாரண அர்த்தங்களுக்குப் புறமே ஸூக்ஷ்மார்த்தங்கள் அடங்கி யிருக்குமென அறியத் தக்கது. விவேகிகள் அவைகளை ஆராய்ந்துணர்ந்து ஸ்ரீராமரைப் போலவே தமது எதாஸ்தான மாகிய மோக்ஷ ஸ்தானத்தில் ப்ரவேஸித்து ஸுகமாக வாழக்கடவர்.

---

# நாகலிங்கப் பூ.

நாகலிங் கப்பூ வேநின்
நலத்தினைப் போற்றுகின்றேன்
ஏகலிங் கம்மாம் எந்தன்
இறைவனை நிகர்க்கின்ருய் நீ
சோகங்கள் நீக்குகின்ருய்
துயரங்கள் போக்குகின்ருய்
ஆகலின் உன்னை யென்றும்
அடியனேன் பரவுவேனே.

நெ.

## கடவுள் வாழ்த்து.

ஆத்தி சூடி, இளம் பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை யெனப் பல மதத்தினர்,
உருவகத் தாலே உணர்ந் துணராது,
பலவகையாகப் பரவிடும் பரம் பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதன்அருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.—பாரதி.

# பிரபஞ்ச ரகசியம்

(பண்டித S. முத்துசுவாமி பிள்ளை எழுதியது)

இப்பிரபஞ்சம் எவ்வாறு தோன்றிற்று—ஆதியில் இது எவ்வாறிருந்தது—தற்காலத்திய நிலைமையை எவ்வாறு அடைந்தது என்பன வாதிய விஷயங்களை ஆராய்ந் தறிதலினும் பேரின்பம் தரக்கூடியது யாதுளது ?

மேனாட்டில் நாகரீக ஒளி வீசத் தொடங்குவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே நமது முன்னோர்களாகிய இருஷீசுரர்கள் இவ் விஷயங்களைப் பற்றி ஆராயத் தொடங்கி ஒரு வகையான முடிவுக்கு வந்துள்ளார்கள். அவர்களது முடிபுகளில் பெரும்பான்மையும் தற்காலத்திய மேனாட்டுப் பண்டிதர்களின் கருத்துகளை ஒத்தும் இருக்கின்றன. ஆயினும் பற்பல காரணச் செறிவால் பிற் காலத்தில் நமது நாட்டில் தத்துவ ஆராய்ச்சி குன்றிப் போகவே, இப்பொழுது நாம் மேனாட்டார் மூலம் தத்துவ சாஸ்திர உண்மைகளை அறிய வேண்டியவர்கள் ஆய் விட்டோம். ஆகவே, ஊணுறக்க மற்று அல்லும் பகலு முழைத்துப் பிரபஞ்ச ரகசியங்களை ஆராய்ந் தறியும் மேனாட்டு சாஸ்திரக்காரர்களின் கொள்கைகளை ஒரு வாறு என் சிற்றறிவுக் கெட்டிய மட்டில் தொகைப் படுத்தி நமது அருமை "லக்ஷ்மி" வாயிலாக வெளி யிடுகின்றேன்.

நான் இறங்கி யிருக்கும் வழியில் என்னினும் அறிவு மிக்க மேதாவிகள் இறங்கி உழைக்க முன் வருவார்களாயின் தமிழுலகம் பெரிதும் நன்மை யடையா நிற்கும். எனவே இது காறும் இவ் வழி ஒருவரும் உழைக்க முன் வந்திலர் என்பது என் கருத்தன்று. ஆங்கிலக் கல்வி தென்னாட்டில் பரவத் தொடங்கிய நாள் முதல் மேனாட்டு சாஸ்திர வுண்மைகளைத் தமிழுலகத்தில் பரப்புவதற்குப் பலர் முயன்றுள்ளார்கள் என்பதும், இன்னும் முயன்று வருகின்றனர் என்பதும் நானறிந்த விஷயமே. ஆயினும் தமிழகத்தின் விரிவையும் ஜனத் தொகையையும் கவனிக்கு மிடத்து அத்தகையார் தொகை மிகச் சொற்ப மென்பதே எனது முறைப் பாடு. தமிழகத்தாரின் அறிவைப் பெருக்கத் தோன்றிய பத்திரிகைகளும் நமது முன்னோர் வெட்டிய தடத்தை

யே பெரிதும் ஒட்டிச் செல்கின்றன. பண்டை நூலாராய்ச்சியால் பல நன்மைகள் உண்டாவதற்கு இட முள்ளதெனினும் நமது சக்தி முழுமையும் அவ் வழி செல வழிப்பது தகுதியாகுமோ வெனத் தமிழுலகம் சிந்தித்தல் நன்று. நமது செல்வ வளர்ச்சிக்கு மேனாட்டு சாஸ்திர ஞானம் மிகவும் இன்றியமையாத தாகலின் தமிழுலக க்ஷேமத்தை விரும்பும் அறிவாளிக ளெல்லாம் மேற் கூறிய சாஸ்திர ஞானத்தைப் பெருக்க முன் வருமாறு வேண்டிக் கொண்டு என் விஷயத்தை விளக்கத் தொடங் குகிறேன்.

உலகத்திலே ஜீவராசிகள் தோன்றி லட்சக் கணக்கான ஆண்டுகள் ஆயின. நமது இந்திய நூல்கள் பிரபஞ்சம் தோன்றிப் பல யுகங்கள் ஆயின வென்று பொதுப் படக் கூறுகின்றன. கிறிஸ்தவ வேதமோ 5,000 வருடங்களுக்கு முன்னரே மனிதன் தோன்றினனென வரை யறுத்துக் கூறுகின்றது. ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஒருவாறு நாகரீகம் பெற்ற மனிதர் உலகத்தில் வசித்திருந்தனர் என்பதற்குப் பல அடையாளங்கள் உள்ளன வென்று சாமுவேல் லான்று என்னும் பண்டிதர் எழுதியுள்ளார். ஆதி மனிதர் வனவிலங் கனைய ராகவே வாழ்ந்து வந்தனர். கண்ணிற் கண்ட மிருகம் பறவை முதலியவைகளைக் கொன்று தின்றே அவர்கள் ஜீவித்து வந்தார்கள். மிருகம் பறவை முதலியன வற்றின் சக்தியும், நகம் பல் ஆதியனவும் விரைந் தோடும் ஆற்றலும் மனிதனுக்கு இல்லா திருந்ததினால் ஆதி காலந் தொட்டே மனிதன் தனது யுக்தியினாலும் தந்திரச்செயல்களாலும் அவைகளைக் கைப் பற்றி உண்டு வயிறு வளர்த்து வந்தான். ஆகவே அவனது யூக சக்தி நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து, அறிவு முதிர்ச்சி பெற்றான். விலங்கினங்களை வேட்டையாடிக் கொன்று தின்னும் வழக்கத்தை அவன் காலக் கிரமத்தில் கை நழுவ விட்டு, ஆடு மாடு முதலிய மிருகங்களைப் பழக்கி, புல்லுள்ள இடங்களில் ஓட்டிச் சென்று மேய்த்து வளர்க்கத் தொடங்கினான். தினந் தோறும் தன் குடும்பத்துக்கு வேண்டிய அளவுக்கு மிருகங்களைக் கொன்றான். அவற்றின் தோல்களை ஆடையாகவும் அணியக் கற்றான். இவ்வாறு பன்னூற்றாண்டுகள் கழிந்த பின்னரே ஆதி மனிதன் உழவுத் தொழிலைக் கைக் கொண்டான். உழவுத் தொழிலைக் கற்றதோடு அவனது அறிவு விருத்தி ஆயிற்று. இங்ஙனம் பல்லாயிர

ஆண்டுகள் செல்ல, தான் பேசும் பாஷையை எழுதும் வன்மையும் பெற்றான். வாய் மொழியா யிருந்த அவனது பாஷை வரை மொழி யானதும் தனது அநுபவங்களை யெல்லாம் பல வகையாகப் பொறித்து வைக்கவும் கற்றுக் கொண்டான். இவ்வாறு அறிவு பெருகிற்று. தோலாடைகளை நீக்கிப் பருத்தித் துணிகளையும் அணியலானான்.

அக் காலத்தவரில் சிந்தனா சக்தியுடைய சில அறிவாளிகள் பூமி யின் உற்பத்தியைப் பற்றிப் பற்பலவாறு எண்ண மிடத் தொடங்கி னர். பூரண அறிவு வளர்ச்சி யடையாத அத்தகைய மனிதர் பூமி யின் உற்பத்தி என்ற பென்னம் பெரிய விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செய்யத் துணிவு கொண்டால் பல தப்பு முடிபுகளை அடைதல் கூடு மென்பது இயல்பே அன்றோ? பிரம்மாண்டத்தில் பூமி ஒன்று மட்டுமே உளதென்று ஆதி காலத்தார் நம்பினர். "தேவன் பூமியை உண்டாக்கினார். பகலும் இரவும் வெளிச்சம் கொடுக்க சூரிய சந்திராதிகளைச் சிருஷ்டித்தார். வானத்துக்கு அணியாக நட்சத்திரங்களை உண்டு பண்ணினார். கடைசியாகத் தனது உருவத்தில் மனிதனையும் படைத்துப் பெருகி வாழும்படி அருள் புரிந்தார்" எனக் கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாடு கூறு கின்றது.

தெய்வ சிருஷ்டியாக பூமி என்ற ஒரு உலகமே உண்டென்று அக் காலத்தார் நம்பினர். இவ்வாறு, அக் காலத்தவர்களில் ஒவ் வொருவர் கொண்டுள்ள பிரமாணங்களை யொட்டிப் பல மதங்களும் தோன்றலாயின. கிறிஸ்து சமயப்படி பிரம்மாண்டத்தில் பூமி யைத் தவிர வேறு உலகமே இல்லை. பூமியிலே தான் சிருஷ்டியும் உண்டாயிற்று. இத் தகைய நம்பிக்கைகள் நிலை பெற்று நூற்றாண்டு கள் ஏற ஏற, மனித வர்க்கத்தின் கல்வி பெருகி அறிவு வளர்ந்து விவேகம் முற்றி ஞானம் முதிர்ந்து நாகரீகம் வளரத் தொடங்கிற்று. மெய்ஞ் ஞானம் உதயமாகவே பழைய நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் பற்றி ஆராய்ச்சி உண்டாயிற்று. முன்னோர் களின் தப்பான கொள்கைகளை யெல்லாம், பிற் காலத்தவர் குருட்டு நம்பிக்கைகள் என அகற்றத் தொடங்கினர். பல பரம்பரையார் உண்மையென நம்பி வந்தவற்றுள் பெரும்பான்மையும் மூட நம் பிக்கை யெனப் பண்டிதர் ஸ்தாபிக்க முன்வந்தனர். வெகுகாலமாக

உண்மையென்று நம்பிய வைகளைப் பொய்யெனத் தள்ளப் பாமர ஜனங்கள் நடுக்கங் கொண்டனர். அவ்வாறு ஸ்தாபிக்க முன் வந்தவர்களைத் தெய்வத் துரோகிகள் என்றும், நிரீச்சுர வாதிகள் என் றும் மூட மக்கள் பழித்தனர். அவ் வறிவாளரின் கொள்கைகள் சாமானிய ஜனங்களிடையில் பரவ வொட்டாது பலவாறு தடுக்கவும் முற் பட்டனர். ஆகவே ஆராய்ச்சி வல்லுநரான அறிவாளிகள் த்மது புதுக் கொள்கைகளை, தேவ ரகசியமாகக் கருதி, தமது சீடர் களுக்கு மட்டும் போதனை செய்து வந்தனர். உண்மைக் கொள்கை களை எத்தனை நாளைக்குத் தான் மறைத்து வைக்க முடியும் ? மெல்ல மெல்ல, இப் புதுக் கொள்கைகள் பல வாயிலாக வெளிவரத் தலைப் பட்டன.

ஒரு பண்டிதர் சூரியன் பூமியைச் சுற்றி வரவில்லை யென்றும் பூமியே சூரியனைச் சுற்றி வருகிறதென்றும் ஸ்தாபித்தார். உடனே, பூமியின் பெருமைக்கு இழுக்குண்டாய் விட்ட தெனப் பயந்த கிறிஸ்தவப் புரோகிதர்கள் அவ் வுண்மையை வெளியிட்ட ஞானி யைச் சிறையி லடைத்து வருத்தத் தொடங்கினர். பின்னும் சில ஆண்டுகள் செல்லவே, பிரம்மாண்டத்தில் பூமியைத் தவிர இன்னும் அளவற்ற உலகங்கள் உண்டென்று ஸ்தாபிக்க ஒவ்வொரு பண்டித ராக முன் வந்தனர். "பூமி இருளடைந்த ஒரு கிரகமே ; அதைப் போல இன்னும் ஏழெட்டுக் கிரகங்கள் உள்ளன ; அவை யாவும் சூரியனைச் சுற்றி வருகின்றன" என்னும் உண்மைகள் காலக் கிரமத்தில் வெளியாயின. சூரியனுக்கும் சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களுக்கும் "சூரிய கடாகம் அல்லது சூரிய மண்டலம்" எனப் பெயரும் சூட்டினர். இம் மட்டோ ? கிரகங்கள் யாவற்றையும் விட சூரியன் மிகப் பெரிய தென்றும் ; பூமியை விடப் பெரிய கிரகங்கள் நாலைந்துக்கு மேல் உண்டென்றும் ஸ்தாபித மாயிற்று. ஆகவே உலகம் ஒன்றே என்ற நம்பிக்கை வேரற்றுப் போயிற்று. எட்டும் பத்தும் உலகங்கள் உண்டென்ற நம்பிக்கை அறிவாளிகளுக் கிடையில் பரவ லாயிற்று. பண்டிதர்களின் ஆராய்ச்சிகள் இத்துடனும் நிற்க வில்லை. நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியன் என் றும், அவை ஒவ்வொன்றையும் சுற்றி ஐந்தோ எட்டோ கிரகங்கள் ஓடிக் கொண்டிருக்கவேண்டும் என்றும் புரோனே என்ற பண்டிதர்

அபிப்பிராயப் படலாயினர். ஆகவே உலகத்தின் தொகை பெருக லாயிற்று. பூமிக்கு இணையான உலகங்களும் அதை விட எத்தனையோ பங்கு பெரிய உலகங்களும் லக்ஷக் கணக்காக உள்ளன வென்று தெளி வாயிற்று. இவ்வாறு பிரம்மாண்டத்தில் கோடானு கோடி உலகங்கள் உண்டென்ற உண்மை பரவத்தொடங்கிய காலத்தில் கிறிஸ்தவப் புரோகிதர்கள் புரோனேவைத் தீக்கிரை யாக்கினர்; கலீலோவைச் சித்திரவதை செய்தனர்.

முன்னோர் கொள்கைகளுக்கு மாறான அபிப்பிராயங்களை வெளியிட்ட இந்திய தத்துவ சாஸ்திரிகளை நமது நாட்டார் ஒரு சிறிதும் வருத்தவே இல்லை. நாஸ்திக வாதிகளும் கூடத் தமது அபிப்பிராயங்களைத் தடையின்றி வெளியிட்டு வந்தனர். இதனாலே இந்திய மக்களின் உண்மைப் பற்று செவ்வனே வெளியாகின்றதல்லவா?

மேலே கூறிய படி கிறிஸ்தவப் புரோகிதர்கள் பண்டிதோத்தமர்களை வருத்தினராயினும் அவர்களது புதுக் கொள்கைகள் அழிவடைய வில்லை. அவை புத்துயிர் பெற்று விளங்கத் தொடங்கின. ஆகவே மெய்ச்சமயம் எதுவென்ற ஆராய்ச்சி தலையெடுத்தது. பிரபஞ்ச ரகசியங்களை அறிவதற்கு மதத்தை விடத் தத்துவ சாஸ்திரங்களே சிறந்தவை யென்ற உணர்ச்சி உண்டாயிற்று. சமய ஆராய்ச்சியால் பிரபஞ்ச ரகசியங்கள் வெளியாக மாட்டா வென்றும் அவைகளை உள்ளபடி யுணர்வதற்கு தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியே ஏற்ற முறை யென்றும் அறிவாளிக ளெல்லாம் உடன் பட்டனர். அவ் வறிவாளிகள் கடவுள் ஒருவர் உண்டென நம்பினார்களாயினும் மனித நிர்மிதமான அக் காலத்திய மதங்களை நம்பவில்லை. பாமர ஜனங்களோ அப் பண்டிதோத்தமர்களை நாஸ்திக வாதிகளெனப் பழித்தனர். தற்காலத்திய சாஸ்திரக்காரர் பிரமாண்டத்திலுள்ள அளவற்ற உலகங்களைக் கீழ் வருமாறு வகுத்துக் காட்டுகின்றனர்:—

1. நேபுலா (Nebule) இது அநேகாயிரம் யோசனை நீளமும் அகலமும் கனமு முள்ள ஒரு வகை "ஆவி மய லோகம்." எத்தனையோ லட்சம் நட்சத்திரங்களின் உற்பத்திக்குப் போதுமான பொருள் ஒவ்வொரு நெபுலாவிலும் உண்டு.

2. எரி நட்சத்திரங்கள்—இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியனே. வான மண்டல மெங்கணும் இவை மின்னிக்கொண்டிருக்கின்றன.

3. இருண்ட நட்சத்திரங்கள்—இவை நெடுங்காலப் பழக்கத்தால் சுயம் பிரகாச மிழந்த சூரியர்க ளாம்.

4. கிரகங்கள்—நட்சத்திரங்களான சூரியர்களைச் சுற்றிவரும் பூமியைப் போன்ற இருண்ட உலகங்கள்.

5. உபகிரகங்கள்—கிரகங்களைச் சுற்றி வருகின்ற இருண்ட கோளங்கள்.

6. மீற்றேர்சும், மீற்றறெட்சும் (Meteors and Meteorites) இவை ஒரு டன் முதல் ஆயிரமோ அதற்கும் மேலோ டன் கனமுள்ள கல் துண்டுகள்.

7. பாயும் நட்சத்திரங்கள் (Shooting stars) இவை வான மண்டலத்தினூடே சஞ்சரிக்கும் மிகச் சிறிய கல்துண்டுகள்.

8, வால் நட்சத்திரங்கள் அல்லது தூமகேதுக்கள் (Comets) இவை ஒரு நட்சத்திரத்துக்கு உள்ளது போன்ற கட்டியான தலையும் 'நெபுலா' போன்ற மிகுந்த நுட்பப் பொருளா லமைந்த மிக அகன்ற வாலும் உள்ளவை, மிக விரைவாகப் பாயும் தன்மை யுடையவை.

எல்லை யற்று எங்கணும் பரவி விளங்கும் வான மண்டலம் இத்தகைய பல்லாயிரக் கணக்கான லோகங்களால் நிறையப் பெற்றுள்ளது. இவ் வுலகங்களில் பலவற்றின் அளவு, பூமியிலிருந்துள்ள தூரம், ஒவ்வொன்றின் கதி, முதலியன வற்றை யெல்லாம் சாஸ்திரக்காரர்கள் மிக நுட்பமாகக் கண்டறிந்துள்ளார்கள். ஒரு மகான் ஸ்பெக்ட்ரோஸ்கோப் (ரூபதரிசனி) என்னும் ஒரு யந்திரத்தை நிருமித்து அதன் மூலம் மேலே கூறிய ஒவ்வொரு உலகமும் இன்ன இன்ன பொருளால் அமையப் பெற்றதென் றறியவும் வல்லமை யுடையவராயிருக்கிறார். இந்த யந்திரத்தின் உதவியால் பரிசோதனை நடத்திய பொழுது மேலே கூறிய உலகங்களில் பெரும்பான்மையிலும் பூமியில் காணப் படும் பொருள்களே காணப் பட்டனவாம். ஆகவே இவ் வுலகங்களெல்லாம் ஒரே உற்பத்தி ஸ்தானத்திலிருந்தே தோன்றியிருக்க வேண்டு மென்று தோன்றுகின்றது.

நமது முன்னோர் கொள்கையும் இதுவே.

இப்பொழுது பூமியில் காணப்படும் பிராணிகளைப்போல, மற்ற உலகங்களிலும் பிராணிகள் உள்ளனவோ என்றறியப் பல பண்டிதர்கள் முயற்சி செய்கின்றார்கள். அவர்கள் முயற்சி நன் முயற்சி யாவதாக!

# புத்துயிர்ப் பத்து

பரலி சு. நெல்லையப்ப பிள்ளை பாடியது

இன்பம் உலக மென்று பாடுவோம்—இனித்
துன்பங்கள் இல்லையென்று சாடுவோம்.
அன்பு பெரிதென்று கூடுவோம்—இனி
ஆனந்த வாரிதியில் ஆடுவோம். 1

கள்ளம் கபட மொன்றும் செய்யோம்—நல்ல
கடவுள் வழியில் நின்றிங் குய்வோம்.
வெள்ள மெனப் பொழியும்—இன்ப
வேலையினில் ஆடி யறம் செய்வோம். 2

அசத்தியம் அனைத்தையும் அழிப்போம்—இங்கு
அதர்மங்கள் அனைத்தையும் ஒழிப்போம்.
நிசத்தையே என்றுமினி வளர்ப்போம்—இனி
நீதியை என்று மிவண் வளர்ப்போம். 3

சோம்பலைத் தூரத்தில் ஒழிப்போம்—இனிச்
சுறுசுறுப் பொன்றையே வளர்ப்போம்.
தேம்பிப் புலம்பியிங்கு மாளோம்—இனித்
தீரச் செயல்கள் செய்து வாழ்வோம். 4

வீரத்தை என்றுமிவண் வளர்ப்போம்—இனி
மெலிவுகள் அனைத்தையும் தொலைப்போம்.
தீரத்தில் பார்த்தனை நிகர்ப்போம்—அறஞ்
செய்வதில் கர்ணனை நிகர்ப்போம். 5

கோழைத் தனத்தையினிக் கொல்வோம்—வீரர்
குணங்கள் அனைத்தையுமே கொள்வோம்.
வாழத் தகும் குணங்கள் கண்டோம்—இனி
வையகத்தில் தேவரென வாழ்வோம். 6

சிறுமைக் குணங்கள் தமை ஒழிப்போம்—இனிச்
சிறந்த குணங்கள் தமை வளர்ப்போம்.
வறுமை சிறுமைகளைத் தொலைப்போம்—இனி
வானவ ரென்ன இவண் சிறப்போம். 7

தேவர் குணங்களினைக் கொள்வோம்—இனித்
தெய்வங்க ளென்ன இவண் வாழ்வோம்.
மூவரும் யாவரும் போற்ற—இந்த
மூதுலகந் தன்னி லினி வாழ்வோம். 8

அன்பினை உலகத்தில் வளர்ப்போம்—இஃது
ஆனந்த மார்க்கமெனல் கண்டோம்.
துன்பங்கள் அனைத்தையும் போக்கும்—இந்தத்
தூயகன் மருந்தைக் கைக் கொண்டோம். 9

புத்துயிர் பெற்றுலகில் வாழ்வோம்—இனிப்
புதிய தமிழ ரென வாழ்வோம்.
மித்தைகள் அனைத்தையும் தள்ளி—இனி
மெய்யைக் கடைப்பிடித்து வாழ்வோம். 10

---

## சுகாதாரக் குறிப்பு

மழை காலத்தில் தரையில் படுக்கக் கூடாது. கீழே படுத்துத் தூங்குவதால் பல வித வியாதிகள் உண்டாகின்றன. கட்டில்கள் சொற்ப விலைக்குக் கிடைக்கின்றன. கட்டில் வாங்குவதற்கு சக்தி யில்லாதவர்கள் பலகைகளின் மேலாவது படுத்துக்கொள்ள வேண்டும். நல்ல காற்றை எப்போதும் சுவாசிக்க வேண்டும். இராக் காலங்களில் ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டு, முகங்களை மூடிக் கொள்ளாமல் படுத்து நித்திரை செய்ய வேண்டும். இவ்வாறு யெல்லாம் செய்தால்தான் ஜனங்கள் அதிக நாள் சுகமாக உயிர் வாழ்வார்கள். சு.

# ச ந் தி ரா

(ஸ்ரீமான் எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு எழுதியது)

"கடைசியாக உன் விடைதா னென்ன? அதையாவது சொல்லி விடு. எதற்காக என்னை இவ்விதம் சித்திரவதை செய்கிறாய்? இந்தப் பத்து தினங்களாக நீ என்னுடன் பேசாமலிருப்பதில் என் மனம் படும் வாதை பரமனே அறிவார். உன்னையே ஸதா தியானித்துக் கொண்டு காதலால் வாடும் என்னை நீ இவ்விதம் வருத்துவது தர்மமா? அப்படி நான் உனக்குச் செய்த குற்றந்தா னென்ன?"

"செய்ததைச் செய்து விட்டு வார்த்தைகள் வேறேயா? அன்றைய தினம் நீர் என்னை.............................."

"ஓ! அது தான் இந்தக் கோபத்துக்குக் காரணமோ? நான் அந்த அறையில் எவரும் இல்லை யென்று உன்னை முத்திசெய்தேன். ஆனால் அங்கே உன் தோழி இருப்பதைப் பிறகு தான் கண்டேன். உடனே மெதுவாக நழுவி விட்டேன். நீ என்னை எத்தனையோ தடவைகளில் முத்தமிட்டிருக்கிறாய். நான் அன்று ஊரிலிருந்து வந்த அவசரத்தில், எப்போது பார்ப்போமோ வென்று என் கண்கள் அலைந்ததில்—அறைக்குள் எவர் இருக்கிறா ரென்பதைக் கூடக் கவனியாமல் உன்னை முத்தமிட்டு விட்டேன். பிறகு என் செய்கைக்காக வருந்தவும் வருந்தினேன். தவறி நடந்து விட்ட விஷயம் இது? இதற்காகவா இவ்வளவு கோபம்? கண்ணே! என்னை மன்னிப்பாய்."

"இங்கே கண்ணு மில்லை, மூக்கு மில்லை. அதிகப் பிரசங்கித்தனமான உமது காரியத்திற்குப் பின்பு உம்முடன் வார்த்தையாடக் கூட எனக்கு இஷ்டமில்லை. நம்முடைய உறவு இவ்வளவுடன் போதும். இனி என்னுடன் பேசுவது மரியாதை யல்ல."

"நன்று நன்று சந்திரா! நீ இவ்விதம் மாறுவா யென்று நான் கனவிலும் நினைந்திலேன். நீ என்னை மட்டும் முத்திடலாம். அதே மாதிரி நான் செய்தது பெருங் குற்றமாய் விட்டது. நல்ல நியாயம் இது. ஆனால்

உன்னைப் போல் குண வேற்றுமை கொள்ளவேணும். என் மனத்தை மாற்றி வேறோர் இடத்தில் பதியவைக்க வேணும். எனக்குத் திறன் இல்லை. நான் சுகப் படுவதும் அழிவதும் உன் கையில் இருக்கிறது. எப்படி இஷ்டமோ அப்படிச் செய்து கொள்.''

"இந்தப் பாசாங்கெல்லாம் என்னிடத்தில் நடவாது. நான் மயுங்கி விடப் பட்டவ ளல்ல. உமது காரியத்தைப் பார்த்துக் கொண்டு போம். நீர் யார்? என்னிடத்தில் உமக் கென்ன வார்த்தை?''

சந்திராவின் கடைசி மொழிகளைக் கேட்டதும் ஸ்ரீநிவா சன் திகைத்துப் போனான். ஒரு பெரும் இடி இடித்தது போ லிருந்தது. சந்திராவா இப்படிப் பேசினது என்று பிரமித் துச் செயலற்று நின்றான். தன் னுள்ளத்தி லிருந்த ஆசை யனைத்தையும் அவள் மீதே வைத்து இவ்வுலகத்தில் அவள் ஒருத்தியே ஜீவாதார மென்று பல வருட காலமாகக் கருதி அளவற்ற காதல் கொண்டு நின்றான். அத்தகை யோனுக்கு அன்னியமான இத் திரஸ்கார மொழிகள் எப்படி யிருந்திருக் கும்? அவன் ஹிருதயத்தில் ஏக காலத்தில் ஆயிரம் அம்பு கள் தைத்தது போல் சந்திராவின் வார்த்தைகள் அவனுக் குப் பட்டன. கண்ணீர்விட்டுக் கதறிய படி சந்திராவின் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்க எண்ணி, அது காறும் மூடிக் கொண்டிருந்த தன் கண்களைத் திறந்து பார்த் தான். எதிரிலே சந்திராவைக் காணவில்லை. சந்திரா அப்பொழுதே போய் விட்டாள். பிறகு மனம் கலங்கிய வனாய் வீட்டிற்குச் சென்றான். சந்திரா சமயற் கூடத்தில் இருந்தாள். இவன் பட்டகசாலையி லிருந்தபடியே அவளை உற்று நோக்கிக் கொண்டிருந்த சமயம், சந்திராவும் இவனைப் பார்த்தாள். இவனுடைய கண்களும் அவளை நோக்க, அதே சமயம் சந்திரா படீரென்று சமய லறையின் கதவை மூடிக் கொண்டாள். இச் செய்கையை நோக்கவும் அவன் உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. என் செய்வான்? மனம் குன்றியவனாய்ப் பிரேத சமானனாய்ச் சில நாட்கள் இருந்து விட்டு ஊர் சென்று விட்டான். ஆனால் சந்திராவை அவன் மறக்க வில்லை.

சந்திரா ஸ்ரீநிவாசனிடத்தில் காதல் கொண்டது உண்மை. அவனையே மணக்க நினைத்ததும் உண்மை.

ஸ்ரீநிவாசன்பிரவிச்செல்வனதலின் அவனிடத்துச் சந்திரா மிக்க அன்புடன் நடந்து வந்தாள். பணத்திற்காகவே காதல் செலுத்தினுள் போலும். ஸ்ரீநிவாசனுக்கு ஏராள மான செல்வம் இருந்த தாயினும், அவனது நான்கு தங்கைகளை விவாகம் செய்து கொடுத்ததில் முக்கால் பாகச் சொத்தும் அழிந்து போயிற்று. பெண்ணைப் பெற்றுப் பட்டவர்களுக்கு இந்தப் பாடு தெரியும். எஞ்சி நின்ற சிறிது செல்வத்தையும் தன் தம்பி விஷயத்தில் செலவிட்டு உயர்தரக் கல்வி பயிலுவித்தான். அத் தம்பி பர்மாவுக்கு உத்தியோகமாய்ச் சென்று மூன்று வருடங்க ளாயின. ஆறு மாதங்கட்குப் பிறகு அவன் கடிதம் எழுதுவதையே விட்டு விட்டான். வருடங்களும் மூன்று ஆயின. தம்பி இருக்கும் இடமே தெரியவில்லை. ஸ்ரீநிவாசன் கடன் மிகுதியாலும் வறுமையாலும் வாடினுன். வீட்டில் அன் னம் பரிமாறு வோரும் இல்லை. தானே சமைத்து உண்டு வந்தான். தரித்துக் கொள்ள நல்ல உடுப்புகள் கூட இல்லாத அவ்வளவு பரம தரித்திர நிலைக்கு வந்து விட்டான். ஸ்ரீநிவா சன் சீமானுக விளங்கிய காலத்தில் தான் சந்திரா அவன் மீது காதல் கொண்டாள். இவன் மிகவும் கேவலப் பட்டு விட்டானென்ற செய்தி சந்திராவுக்கு எட்டியபோது உண் மையா யிருக்குமோ வென ஸம்சயித்தாள். முதலில் அச் செய்தியை நம்பவில்லை. பின் சில நாட்கள் பொறுத்து ஸ்ரீநிவாசனே அவள் ஊருக்கு வந்த போது தான் யாவும் உண்மை யென்று தெரிந்து கொண்டாள்.

சீச்சீ! இந்தப் பரம தரித்திரனை மணந்து கொண்டு என் செய்வது? நமது அழகுக்குத் தக்க செல்வ வந்தனை விவாகம் செய்து கொண்டால் சுகமே யன்றி, இந்தத் தூர்த்தனுக்கா நமது கழுத்தைக் கொடுப்பது? நம் மீது அவன் மிக்க காதல் கொண்டிருக்கிறு னென்பது உண்மை தான். அதை மறுக்க முடியாது தான். ஆனுல் இவனுல் காசு மாலை போட முடியுமா? ரவைக் கம்மலுக்கு இவனுக்கு விதி யேது? தங்க ஒட்டியாணத்திற்கு இந்தத் தரித்திரன் எங்கே போவான்? வைர அட்டிகை சொற் பனத்திலும் காண முடியாது. இனி இவன் உறவைக் கத்த ரித்துவிட வேண்டியதே யென்று தீர்மானித்துக் கொண் டாள். ஆயினும் அந்தத் தடவை மட்டும் அவனுக்குப்

பிரியமாக நடந்து அவன் பிரிவுக்கு வருந்துவது போலப் பசப்பி அவனது பிரயாணத்திற்கு விடை கொடுத்தனுப்பினுள். பிறகு இரண்டாவது முறை வந்த போது தான் அவன் வண்டியை விட்டு இறங்கியதும் அவள் அறைக்கு ஓடி வந்து காதல் மிகுதியால் அவளை முத்த மிட்டு விட்டான். உடனே அவள் கொடிய சர்ப்பமாகச் சீறிச் சினந்து அவனை உதறித் தள்ளி விட்டு அப்பாற் சென்றுள். அவன் இச் செயல் நோக்கித் திடுக் கிட்டு வியர்த்து நின்றுன். அதன் பின்பு அவள் இவனுடன் பேசவே யில்லை. கடைசியாக அவன் ஊருக்குப் புறப்பட இரண்டொரு நாள் இருக்கையில்தான் இக்கதையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சம்பாஷணை அவ் விருவருக்கும் நடந்தன.

ஸ்ரீநிவாசன் அதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை சந்திராவின் வீட்டிற்கு வந்திருந்தான். சந்திரா அவனுடன் பேசுவதில்லை. அவன் இருக்கும் இடத்தை வெகு வேகமாய்த் தாண்டி அப்பாற் செல்லுவாள். வெகு முறுக்காக இருந்தாள். ஒரு தடவை ஒரு வாரமாக அவள் வீட்டில் அவன் ஜ்வரமாகக் கிடந்தான். எனென்று கூட சந்திரா எட்டிப் பார்க்கவில்லை. இது அவன் மனத்தை வெகுவாய் வாட்டி அலைத்தது. ஒரு தரம் கடையிலிருந்து பக்ஷணங்கள் வாங்கி வந்தான். வீட்டிலிருந்த யாவரும் புசித்தனர். சந்திரா மட்டும் அதைக் குப்பையில் எறிந்து விட்டாள். இதையும் அவன் கவனித்துக் கொண்டான். வருடங்கள் இரண்டு கடந்தன. ஸ்ரீநிவாசன் இப்பொழுது திடப்பட்டுப் போனுன். சந்திராவின் திரஸ்காரத்தை அவன் ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை. அதை லக்ஷியமும் செய்யவில்லை. ஆனுல் சந்திராவின் காதலை அவன் மறக்க வில்லை. அவள் நமது சொத்து அல்ல வென்று மட்டும் மனதுக்குத் தெளிவுறுத்தி அந்த ஆவலை வெகு சிரமப் பட்டு அழுகையும் கண்ணீருமாய் அடக்கி விட்டான். மேலும் ஒரு வருடம் சென்றது. ஸ்ரீநிவாசன் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். சந்திராவின் பெற்றேர்களிடம் பேசுவதும் அவர்களுடன் இருப்பதுமாய்க் குலாவி விட்டுப் புறப்பட்டு விடுவான். சந்திராவின் பிதாவுக்கும், ஸ்ரீநிவாசனின் பிதாவுக்கும் அத்தியந்த நட் பிருந்தது. இவ்விருவரும்

வேளாள மரபினர். இருவரும் முதலியார்கள். சந்திராவும் ஸ்ரீநிவாசனும் இளமை முதலாக ஒன்றாக இருந்து வளர்ந்தவர்கள். வளர்ந்து காதலிலும் சிறந்தவர்களாக விளங்கினர். பின்னர் சந்திராவின் பணப் பேய்—ஸ்ரீநிவாசனின் வறுமை மேலே விவரித்த வாறு பிரித்து விட்டது. பணத்திற்காகவா காதல்? ஐயோ சந்திரா? உன் மடமைதா னென்னே! பணம் நாளைக்கு வரும். காதலித்த காதலன் நாளைக்கு வருவானா?

ஒரு நாட் பகற் போதிற் சந்திராவின் தாய் தந்தையர் வெளியே சென்றிருந்தனர். ஸ்ரீநிவாசன் அப்போது மிகக் களைப்புடன் வீட்டிற்குள் நுழைந்தான். அன்னம் பரிமாறுவோர் எவருமில்லை. ஏக்கம் மிகுந்து நின்றான். அச் சமயம் அடுத்த வீட்டி லிருந்து ஒரு பெண் வர, சந்திரா அவளைக் கொண்டு அன்னம் பரிமாறும் படி செய்தாள். இது ஸ்ரீனிவாசனுக்கு மிக்க வருத்தம் தந்தாலும், இந்த வருத்தங்களி லெல்லாம் அவன் நன்கு தேறி பி. ஏ. பாஸ் செய்து விட்டதால் அதை அவன் பொருட் படுத்தவில்லை. அன்று தனது தினசரியில் பின்வருமாறு ஒரு குறிப்பும் எழுதி வைத்தான் :—

"ஒருவர் ஒரு விஷயத்தை ஒருவருக்குச் செய்ய முடியாதென்று மறுத்து விட்டு, அதனால் அவர்களின் மனத்தை நன்கு புண் படுத்தி விட்ட தாகவும், அவர்கள் மீது தங்களுக்குள்ள கோபப் பிடிவாதத்தை இன்னும் அதிகமாகக் காண்பித்துக் கொண்ட தாகவும் வெறுமனே நினைத்துக் கொண்டு தங்களை ஆகாசத்தில் உயர்த்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தத் திரஸ்காரங்களுக்கு ஆளானவனோ இந்த அலக்ஷியங்களிலே நன்கு தேரிவிட்டவ னாகையால், தான் ஊருக்கு வந்த காரியத்தில் மட்டும் கண்ணும் கருத்துமாயிருந்து கொண்டு—இந்த மறுத்தலையும், கோபத்தையும் துரும்பாய் நினைத்துப் பொருட் செய்யாமற் போய் விடுகிறான். அவன் மனத்திலும் அந்தத் திரஸ்காரம் தைத்துப் பாய்வ தில்லை. கோபித்தோரது நோக்கமும் நிறைவேறுவ தில்லை."

ஸ்ரீனிவாசனுக்கு வறுமை தாங்க முடியவில்லை. அவனும் பர்மாவுக்கே புறப்பட்டுச் சென்றான். கப்பலை விட்டு

இறங்கியதும் ஒருவர் அவனை அன்புடன் விசாரித்தார். அவர் யாரென்று தெரியவில்லை. அவருடன் தானும் சென்றான். ஒரு பெரிய மாளிகையைக் கிட்டினான். உட்புகுந்ததும் ஒருவர் வந்து வணங்கினார். தலை நிமிர்ந்து பார்த்தான் ஸ்ரீனிவாசன். தன் உயிர்த் தம்பி எதிரிலே நிற்கக் கண்டு அவனைத் தழுவிக்கொண்டு அலறினான். அடா தம்பி! என்னை இவ்விதம் கைவிடலாமா? மறக்கலாமா? என்று புலம்பினான்.

தம்பியான ஜெகநாதன் பின் வருமாறு கூறினான். என் அன்புள்ள அண்ணா! நான் செய்தது பிசகு தான். ஆனால் நன்றித் துரோகியில்லை. இது காறும் என் மனிதனொருவனைத் தங்களுக்குத் தெரியாமல் தானே வேலை பார்த்துக்கொண்டிருக்க விட்டு யாவும் கிரகித்தபடி இருந்தேன். ஏன் இப்படிச் செய்தேனென்றால் அதைத் தாங்கள் பொறுமையுடன் கேட்க வேண்டும். நமது பிதா தங்களிடம் ஏராளமான செல்வத்தை வைத்துப் பெட்டிச் சாவியைத் தங்களிடம் தந்து சென்றார். தங்களின் கைராசியோ தாராளச் செலவில் ததும்புவதாகும். துர்விஷயமாக ஒரு காசு கூட நீங்கள் விரயம் செய்யவில்லை யென்பது என் மனதுக்கு மட்டுமல்ல—ஊரார் அனைவருக்கும் தெரியும். தங்கைகள் அனைவருக்கும் விவாகம் செய்து வைத்தீர்கள். ஏராளமான செல்வத்தை அதில் விரயம் செய்தீர்கள். அதை மிதமாகவே நடத்தியிருக்கலாம். தங்களின் தாராளக் கையானது அதற்கு ஒப்பவில்லை. அதில் முக்கால் பாகச் சொத்து செலவாய் விட்டது. மிஞ்சியதை என் விஷயத்தில் படிப்புக்காக வாரி இறைத்து விட்டீர்கள். நீங்கள் பரம தரித்திர நிலையில் தவித்த போது உங்களை எந்தத் தங்கையின் கணவனாவது எட்டிப் பார்த்தானா? உதவினானா? அவரவர்களும் ஜாடையாகக் கண் மறைவாயிருந்து விட்டார்கள். பெண்ணைப் பெற்றுக் கொண்ட வீட்டார் சங்கதி அவ்வளவு தான். உண்டான போது கோடானு கோடி உறவின் முறையார். பின்னரோ ஏன் எட்டிப் பார்க்கிறார்கள்? கண்டாலும் பேசார். அழைத்தாலும் வாரார். இந்த உண்மையைத் தாங்கள் அறிந்து கொண்டு விட்டீர்கள். எப்படியாவது நம் தங்கைகள் சௌக்கியமாக இருந்தால் போதுமானது. தங்கைகள் புருஷன்

வழியில் நடக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு நம் மீது பிரியம் உள்ளுக்கு இருக்குந் தான். ஆனால் அதைப் பஹிரங்கமாகக் காண்பித்துக் கொள்ள அவர்களுக்கு—பெண்களுக்கு—சுதந்திரம் எது? உள்ளுக்குள்ளேயே அவர்கள் உங்கள் நிலைமைக்கு வருந்திக் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழி யில்லை.

இனி, சுதந்தரஸ்தனாகிய ஆண் மகன் என்னும் நானோ இப் பர்மா நாட்டிற்கு வந்ததும் கடவுள் கிருபையால் உயரிய உத்தியோகத்தில் ஆரம்பத்தில் தானே அமர்ந்தேன். உங்களுக்கு மாதா மாதம் பணம் அனுப்ப எண்ணினேன். ஆயினும் உங்களின் தாராளக் கையானது கொஞ்ச மேனும் கஷ்டத்தை யுணர்ந்தால் தான் நிதானப்படும் என்று நினைத்து ஒரு யோசனை செய்தேன். இங்கிருந்து ஒரு மனிதனைத் தங்களிடம் அனுப்பித் தங்களைக் கவனித்துப் பிரதிவாரமும் செய்தி தெரிவிக்கு மாறு ஏற்பாடு செய்தேன். இதுகாறும் நீங்கள் பட்ட பாடுகள் யாவற்றையும்—சந்திரா திரஸ்கார முதல் அனைத்தையும் தங்களை யறியாமலே அவன் எனக்குத் தெரிவித்து வந்தான். கடைசியாகத் தாங்கள் இரங்கூனுக்குப் புறப்படவே அவனும் தங்களுடனேயே மறைந்து வந்து, கப்பலை விட் டிறங்கியதும் தங்களைப் புதியவன் போல் க்ஷேமம் விசாரித்து இங்குஎன்னிடம் அழைத்து வந்து விட்டான். இது தான் நடந்த விஷயம். நான் இங்கு உயர் பதவியில் இருப்பினும் மிகச் சிக்கனமாகக் கால க்ஷேபம் செய்து இருபதாயிரம் ரூபாய் வரை சேகரித்து வைத்துள்ளேன். அதைத் தங்களுக்கு இப்போது ஸமர்ப்பிக்கின்றேன். இதைக் கொண்டு வியாபாரத்தில் விருத்தி செய்து வாருங்கள். என் ஜீவ காலத்தில் நான் தேடுவதில் பாதி தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்பொழுது பட்ட தரித்திரக் கஷ்டத்தை எப்போதும் நினைவில் வைத்து நிதானமாகச் சிக்கனமாய் நடந்து கொள்ளுங்கள். தங்களை நான் மறக்க வில்லை. என்னையும் தாங்கள் மறக்க வில்லை. சரீரத்தாற் பிரிந்திருந்ததே யன்றிச் சிந்தையை விட்டு ஒரு போதும் நீங்கியவர்க ளல்ல—என்று கூறி சாஷ்டாங்கமாகத் தமயனாரது பாத கமலங்களில் வணங்கினான். ஹா! இவ னல்லவோ தம்பி! ராமனுக்கு லக்ஷ்மணன் போல!!

வருடம் ஒன்று ஆனது. சந்திராவுக்கு ஸ்ரீநிவாசன் ரங்கூனுக்குப் போய் விட்டது தெரியும். சனி தொலைந்த தென்று சந்தோஷமாய் இருந்தாள். அவள் பருவ மடைந்து ஐந்து வருடங்க ளாயின. அவள் தகப்பனர் விவாகத்திற்கு எந்த ஏற்பாடும் செய்ய வில்லை. வந்து கேட்பவர்களுக் கெல்லாம் ஒவ்வொரு குறை சொல்லி அனுப்பிய படியே இருந்தார். செல்வ வந்தர்கள் வீட்டினர் மூவர் வந்து கேட்டு வைரங்களால் சந்திராவை அலங்கரிப்பதாகப் பேசினர். ஜாதி சரி யில்லையென்று மறுத்து விட்டார். சந்திராவுக்கு மிக்க ஏக்கமாய் விட்டது. என் செய்வாள்? அவளோ பருவ மங்கை, அவளுடைய மனக் கஷ்டங்கள் அவளுக்குத் தெரியும். அவற்றை வாய் விட்டுச் சொல்லப் போமோ? ஸ்ரீநிவாசனை அழுது புலம்ப வைத்ததற்குப் பதிலாக இப் பொழுது இவளே ஏங்குவ தானாள். முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். சாதுவான ஸ்ரீநிவாசனை நோக வைத்தது தர்மமா வென்று அப்பொழுது மனதில் தோன்றுவிடினும் இப்போது அது அவள் மனத்தை ஆயிரம் அம்புகள் கொண்டு குத்தியது போலிருந்தது. அவன் இருந்தாலாவது அவனையாவது விவாகம் செய்துகொள்ளலா மென்று நினைத் தாள். அவனைப் பற்றித் தன் பிதாவிடம் கேட்கவும் எண்ணி ஞள்: கேட்டாள். அவரோ பழைய கந்தபுராணத்தை விரிக்க ஆரம்பித்தார்.

“சந்திரா! அந்தத் தரித்திரனைப் பற்றிஎன்னிடம் ஏன் கேட்கிறாய்? ஒரு வார்த்தை தன்னிடம் உன்னைக் கொண்டு பேசச் செய்ய வேண்டு மென்று எத்தனையோ முறை என்னிடம் அழுது புலம்பி யிருக்கிறான். நானும் உன்னிடம் பல முறை வேண்டி, அவனிடம் அவ்வளவு கோபமாய்ப் பேசா திருப்பது சரியல்ல வென்று எவ்வளவோ புத்திமதி கூறினேன். நீ கேட்டா யில்லை. அவன் முத்தமிட வந்தா னென்பதை மட்டும் பகிரங்கமாய் வெளி யிட்டு அவனைப் பலரும் தூற்றச் செய்தாயே யன்றி, நீ அவனை வலிய முத்த மிட்டதை மட்டும் நீ வெளியிட்டுக் கொள்ள வில்லை. அவன் தரித்திரனுயினும் பிறவித் தரித்திர னல்ல. தன் தந்தை தன்னிடம் ஒப்புவித்த கடமைகளைக் குறைவறச் செய்து முடித்த உத்தமன். தனது நான்கு தங்கைகளுக்கும் பெரிய இடங்களில் மணமுடித்து அதற்கேற்ற கௌரவமாய்ச் சகல

சீர் வரிசைகளும் நடப்பித்தான். தனது தம்பியையும் உயர் தரக் கல்வியில் தேற வைத்தான். தனக்கு மட்டும் சொற்ப வியாபாரப் படிப்புப் போது மென்று அவ்வளவில் நிறுத்திக் கொண்டான். இத் தகைய குணசீலன் தரித்திரனு யிருந்தா லென்ன? அவனையே மணந்து கொண்டு பிச்சை எடுத்தா லும் அதில் கேவல மில்லை. இதிலிருக்கிற மனோ நிம்மதி வைரங்களால் அலங்கரிக்கிற வீட்டில் இராது. குண சீலனுன ஸ்ரீநிவாசன் உனக்குக் கிடைக்க நீ எவ்வளவோ பாக்கியம் செய்திருந்தா லன்றி முடியாது. உன்னுலேயே அவன் இவ் வூரைவிட்டுத் தொலைந்தான். எக்கதி யானுனோ! மிக்க மானி. தர்மத்திற் கன்றி பாவத்திற்குத் தலை வணங்காதவன். கை விட்டுப் போன பொருளைத் தேடுவதுபோல, இப்போது மகா உருக்க முள்ளவள் போல் அவனைப் பற்றி ஏன் கேட்க வருகிறுய்?'' என்று கடூரமாய்ப் பேசினுர்.

சந்திரா என்ன செய்வாள்? தான் மூத்த மிட்டதும் தன் தந்தைக்குத் தெரிந்து விட்டது. தான் ஏழை யென்று ஸ்ரீநிவாசனை வெறுக்க, தன் தந்தையோ ஏழ்மை யிலும் குணசீலத்தையே பெரிதும் போற்றிப் பேசுகிறுர். அவளுகது ஒன்றும் தோன்றுமல் நாணமும் துக்கமும் மேலிட்டு அழுது கொண்டே தன்னறைக்குச் சென்றுள்.

அதற்கு மேலும் ஒரு வருஷம் சென்றது. சந்திரா வின் விவாகத்திற்கு எவ் வித பிரயத்தனமும் நடக்க வில்லை. சந்திராவுக்கு அது பரம அவஸ்தையா யிருந்தது. அவ் விதத் துன்பம் நுகர்ந்தோரே அதனை அறிய வல்லார். சந் திராவுக்கு ஸ்ரீநிவாசனின் மீது நினைவும் காதலும் பழைய எண்ணங்களும் அதிகரித்தன. தன் பூர்வ திரஸ்காரத்தை நினைத்துப் பெரிதும் நொந்து கொண்டாள். அவன் இருக்கும் இடமோ தெரிய வில்லை. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?

கடைசியாகச் சந்திராவுக்கு அவள் தந்தை ஒரு இடத்தை ஏற்பாடு செய்தார். பெரிய இடத்தில் தருவதா னுல் கனகாபிஷேகம் செய்தாலன்றி நடக்கா தென்றும் பெரிய இடத்திற்கு ஏற்ப மிகுதியான செலவுகள் பிடிக்கு மென்றும், ஆதலின் ஒரு சிறு கிராமத்தில் சில்லரைக் கடை வைத்துள்ள ஒருவனுக்குத் தருவ தென்று தீர்மானித்து

விட்டதாயும், அது குறைந்த செலவில் விவாகம் நடத்தத் தகுந்த வழி யென்றும், மணமகன் புத்திசாலியாக இருப்பதே போது மென்றும் கூறி முடிவு செய்து விட்டார். சந்திரா என்ன செய்வாள்! பெரிய இடங்களில் வாழக்கைப் பட நினைத்திருந்த அவள் தன் தந்தையின் ஏற்பாட்டைக் கேட்டதும் கண்ணீர் விட்டாள். சில்லரைக் கடை வியாபாரியை விட ஸ்ரீநிவாசன் எவ்வளவோ மேலென்று அவளது ஹிருதயம் அவளுக்குக் கூறிற்று. தந்தைக்கும் அதைத் தெரிவித்தாள். அந்தத் தரித்திரனை இப்பொழுது எங்கே தேடுகிறது என்று அலக்ஷியமாய்ப் பதில் கூறினார் அவர். சந்திராவுக்கோ பரம துக்கம். ஸ்ரீநிவாசன் மீது அவளுக்கு இப்பொழுதுள்ள பக்தியும் காதலும் அளவிட்டுரைக்க முடியாது. ஸ்ரீநிவாசனின் படத்தை வைத்துத் தினமும் பூஜித்துக் கொண்டு வருகிறாள். அவர் அப்படியாவது வந்து சேர்ந்துவிட மாட்டாரா என்று கடவுளை வேண்டிப் பிரார்த்தனை புரிந்து கண்ணீர் விடுவாள். ஸ்ரீநிவாசனைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவே யில்லை.

ஆயிற்று. விவாக தினமும் வந்தது. கிராமத்திலே தான் கல்யாணம். அது தான் செலவைச் சுருக்கச் சுலபமான வழி. மாப்பிள்ளைக்கு ஒரு கண் பிறவியிலேயே குருடு என்று சந்திராவுக்கு எவரோ கூறி விட்டனர். அத்துடன் ஒரு கால் நொண்டியாம். சந்திராவின் துக்கம் எப்படி யிருக்குமா? ஐயோ! ஸ்ரீநிவாசா! என்னை வந்து இந்த சமயம் காப்பாற்றாயா? என்று வாய் விட் டலறினாள்.

மங்கள வாத்தியங்கள் முழங்கின. சந்திராவுக்கு எதிரில் மாப்பிள்ளையும் வந்து குந்தினார். சந்திரா மெதுவாகத் தலை தூக்கிப் பார்த்தாள். மாப்பிள்ளை பலமான மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு விளங்கினார். இது குருட்டுக் கண்ணை மறைப்பதற்கான சூழ்ச்சி என்று சந்திராவுக்குத் தெரிந்து விட்டது. மாப்பிள்ளை வரும் போதே கோல் ஊன்றிக் கொண்டு நொண்டிய படி வந்ததையும் சந்திரா கவனிக்காம லில்லை. அடுத்த நிமிஷம் தனது கழுத்தில் மாங்கல்யம் விழப் போகிறது. செய்யும் வகை எது மில்லை.

மாங்கல்ய தாரணமும் ஆயிற்று. சந்திரா உடனே மூர்ச்சை போயினாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு கண்

விழித்துப் பார்த்தாள். தான் வேறொரு ஆண் மகனின் தொடையில் தலைவைத்துச் சயனித் திருப்பதைப் படுத்த படியே நோக்கினாள். அது ஸ்ரீனிவாசன் ரூபமா யிருந்தது. தான் காண்பது கனவா நினைவா என்று மீண்டும் அவ் வுருவத்தை உற்று நோக்கினாள். உண்மையாகவே ஸ்ரீநிவாசனே எதிரில் இருக்கிறான். அவள் காதலித்து மறந்து திரஸ்கரித்த அந்தப் பழயை ஸ்ரீநிவாசனே அவன்!

ஐயோ! சிறிது நேரத்திற்கு முன் வந்திருக்கலாகாதா? நான் பாவி வே றொருவருக்கு மனைவியாய் விட்டேனே! ஐயோ! தெய்வமே! என்று கதறினாள்.

"என் பிரிய சந்திரா! ஒன்றும் பிசகிப் போய் விடவில்லை. நானே உனக்கு மாங்கல்ய தாரணம் செய்தவன். நானே குருடன் போன்றும், நொண்டி போன்றும் நடித்தவன். எனது தலைப் பாகையும் மூக்குக் கண்ணாடிகளும் என் உருவை உனக்கு வேற்றுமைப் படுத்திக் காண்பித்து விட்டன" என்றான் ஸ்ரீநிவாசன்.

"நாதா! நாதா! தாங்களா மாங்கல்யம் சூட்டியது? நான் கோரிய படியே கடைசியில் நீங்களே எனக்கு கிடைத்து விட்டீர்களா? மகா பாக்கியம். நான் பெரும் அதிர்ஷ்டசாலியே. எனக்கு செல்வம் வேண்டாம்; இவ் வுலகில் எதுவும் எனக்கு வேண்டாம். ஏழையாகிய நீங்களே எனக்கு வேண்டும். என்னை மன்னித்து விட்டீர்களா? என் அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்றாள் சந்திரா.

"உனது திரஸ்காரத்தை அப் பொழுதே நான் கருத்திலிருந்து அகற்றி விட்டேன். என்னை நீ மறப்பினும் உன்னை நான் மறக்கவில்லை. என் காதல் நெஞ்சம் என்றுமே உன்னை மறவாது. நீ ஐஸ்வரிய ஸம்பன்னனையே அப்பொழுது கோரி நின்றாய். இப்பொழுது நான் பர்மாவில் பிரபல வியாபாரி. ஏராளமான செல்வத்திற்கு அதிபதி. எனவே உன்னை அடைவதற்கும் நான் இப்பொழுது பாத்திரனாய் விட்டேன். என் க்ஷேமங்கள் அனைத்தும் உன் தந்தை அறிவாராயினும் அதை உனக்கு அவர் தெரிவிக்காமலே, உன் மனத்தைத் திருத்தவே இவ்வளவும் முயன்றார். சுபம்.



வண்டூர் தெப்பக்குளம், மதுரை.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

முன் தொடர்ச்சி.

## 6. குண்டையூர்க் கிழவரிடம் நெல்லுப் பெற்றது.

இங்ஙனம் ஆரூரில் நாவலூர் நம்பி எழுந்தருளி யிருக்கும் போது "குண்டையூர்க் கிழவர்" என்னும் வேளாளர் ஆரூராருக்குச் செந்நெல், பருப்பு, முதலியன வேண்டுவன தந்து திருவடித் தொண்டு பூண்டு வந்தனர். இப்படி யிருக்க, மழையிலாது நிலம் வளஞ் சுருங்கக் குண்டை யூர்க் கிழார் "அந்தோ! எனது தொண்டு இடையூறு உறுகின்றதே! ஆரூராருக்குக் கொடுக்க நெல் இல்லையே!" என மதி மயங்கி உண்ணாது உறங்கினர். இறைவன் அவர் கனவிற் றோன்றி "ஆரூரர் பொருட்டு நெல் அளித்தோம்" என்றனர். பொழுது விடிந்து நோக்கும் போது நெல் மலையாகக் குவிந்திருப்பதைக் கண்டு, சிவபிரான் திருவருளையும் நம்பியாரூரரின் பெருமை யையும் வியந்து தொழுதார். பின்னர், 'இந்த நெல் மலையை யான் எப்படித் திருவாரூரிற் சேர்ப்பது? நம்பிக்கு இவ்வதிசயத்தைப் போய்க் கூறுவேன்' எனத் தீர்மா னித்துத் திருவாரூருக்குப் போய் நிகழ்ந்த செய்தியைக் கூறி, "அந் நெல்மலை மனிதர் எடுக்கும் அளவினதல்ல. யான் என் செய்வது" என்றனர். ஆரூரரும் குண்டை யூருக்கு வந்து நெல் மலையைக் கண்டு அதிசயித்துப் பரவையின் மாளிகைக்கு இந் நெற்குவை போய்ச் சேர நீலகண்டரே திருவருள் புரிந்தாலன்றி வேறு வழி யில்லை எனத் தேறி அருகிலுள்ள திருக்கோளிலி என்னுங் கோயி லில் வீற்றிருக்கும் பெருமான் மீது—

"நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே."

எனவரும் (20-ஆவது) திருப் பதிகத்தைப் பாடினர்.



18

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 600 008 210331

"பரவை மனையளவொடு நில்லாது திருவாரூர் நிறைய இந் நெற்குவை இன்றிரவே நமது பூதங்களாற் கொண்டு வந்து சேர்ப்பிக்கப்படும்" என அசரீரி வாக்கு உடனே நிகழ்ந்தது. அதைக் கேட்ட ஆரூரரும் மகிழ்ந்து திருவாரூர் வந்து பரவையாருக்கு இவ் வற்புதச் செயல்களை எடுத்தோதினர். அன்றிரவு பரவையார் மனையேயன்றி ஊர் முழுவதும் நெற் குவை நிரம்பக் கண்டு ஊரிலுள்ளார் "இந் நெற் குவை பரவையாருக்கு நம்பியாரூர ரளித்தது" எனத் தேர்ந்து அற்புதம் எய்தினர். பரவையாரும் அவரவர் மனை யெல்லைக்குட்பட்ட நெற்குவையை அவரவர் எடுத்துக் கொள்ளலாம் என ஊர் முழுதும் முரசறைவித்தனர்.

## 7. ஸ்தலயாத்திரை (1).

(கோட்புலி நாயனருடன் நட்பு).

இங்ஙனம் வாழு நாளிற் சேனபதி கோட்புலியார் என்னுந் தொண்டர் ஆரூரரைத் தமது ஊருக்கு எழுந் தருளும்படி வேண்ட, ஆரூரரும் அவர் வேண்டு கோளுக் கிணங்கி அவருடைய ஊராகிய திருநாட்டியத்தான்குடிக்குச் சென்றனர். அங்குக் கோட்புலியார் பல வகைத்தாய உபசாரஞ் செய்து தமது பெண்களாகிய சிங்கடியார், வனப் பகையார் என்னுங் குழந்தைகளை ஆரூரர் எதிரிற் கொண்டு வந்து "அடியேன் பெற்ற மக்கள் இவர். இவர்களை அடிமை யாகக் கொண்டருள வேண்டும்" என வேண்ட, ஆரூரரும் அக் குழந்தைகளைத் தமது தொடைமீ திருத்தி 'இவ் விருவரையும் எனது மக்கள் போலப் பாவித்தேன்' எனச் சொல்லி உச்சி மோந்து அன்பு காட்டினர். அதா அன்றித் தாமருளும் பதிகங்களுட் சிங்கடியப்பன், வனப்பகை யப்பன் எனத் தம்மைக் குறிப்ப தாயினர். பின்பு, ஆரூரர் அங்கிருந்து புறப்பட்டுத் திருவலிவலம் என்னுந் தலத்தைத் தரிசித்துத் திருவாரூர் வந்து சேர்ந்தார்.

(திருப்புகலூரிற் செங்கற்கள் பொன்கற்களாகப் பெற்றது).

அப்போது பங்குனி உத்திரத் திருநாள் வந்து குறுகப் பரவையாரின் செலவுக்குப் பொன் பெற விரும்பித் திருப் புகலூர் என்னுந் தலத்துக்கு எழுந்தருளிப் புகலூர்ப் பெரு

மானைத் தரிசித்துத் தமது குறையை விண்ணப்பித்து அயலிலுள்ள மடத்தி லமர்ந்து துயில் கொள விரும்பிக் கோயில் திருப்பணிக்காக அங்குக் கிடந்த செங்கல் பலவற்றைத் தலைக்கு உயரமாக வைத்துத் தமது வெண் பட்டை அவைமேல் விரித்துப் பள்ளி கொண்டனர். சுற்றி யிருந்த தொண்டர்களும் துயின்றனர். ஆரூரர் துயி லொழிந்து எழுந்திருக்க இறைவ னருளால் செங்க லெல்லாம் செம் பொற் கற்களாக இருக்கக் கண்டு, புகலூர் நாதரைப் போற்றித்

" தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையு
மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே." [34]

என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார்.

(பனையூரில் நடன தரிசனம்).

பின்னர்த் திருப்பனையூர் என்னுந் தலத்துக்கு எழுந்தருளி அங்கு இறைவன் காட்டியருளிய திருக்கூத்துத் தரிசனத்தைப் பரவி,

"மாட மாளிகை கோபு ரத்தொடு மண்ட பம்வள ரும்வளர் பொழிற்
பாடல் வண் டறையும் பழனத் திருப்பனையூர்த் [பாடநின்
தோடு பெய்தொரு காதினிற்குழை தூங்கத் தொண்டர்க ளுள்ளிப்
றாடு மாறு வல்லா ரவரே யழகியரே." [87]

என்னுந் திருப் பதிகத்தைப் பாடிச் செம்பொற் கற்களை யெல்லாம் ஆள்கள் தூக்கிவரத் திருவாரூர் வந்து சேர்ந்தனர்.

## 8. ஸ்தல யாத்திரை (2).

திருவாரூரிலிருந்த படியே பக்கத்திலுள்ள தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்துப் பின்னர் நன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், *அரிசிற் கரைப் புத்தூர்,

* இத்தலத்துப் பதிகத்திற் [9] புகழ்த்துணை நாயனாரின் பெருமையைக் கூறி யுள்ளார்.

றையூர்ச் சித்தீச் சுரம், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், கலைய நல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச் சோற்றுத்துறை, திருக் கண்டியூர், திருவையாறு, திருப்பூந் துருத்தி ஆகிய பல தலங்களைத் தரிசித்துத் திருவாலம்பொழில் என்னும் தலத் தைச் சேர்ந்தனர்.

(திருமழபாடிக்கு வா என அழைத்தது).

திருவாலம் பொழிலில் தங்கி யிருக்கும்போது இரவில் இவர் கனவில் இறைவன் தோன்றி "மழபாடியை நினைந்து வர மறந்தாயோ" என்ன, ஆரூரரும் உடனே காவிரி யின் வடபுறத்துள்ள திருமழ பாடிக்கு வந்து,

"பொன்னார் மேனியனே புலித் தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னை யல்லா லினி யாரை நினைக்கேனே" [24]

என வரும் திருப்பதிகத்தைப் பாடினர். பின்னர்த் திருவானைக்காவுக்கு வந்து †ஆரஞ் சாத்தின சோழன் பெருமையைத்,

"தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்து
நீரி னின்றடி போற்றி நின்மல கொள்ளென வாங்கே
ஆரங் கொண்ட எம் ஆனைக் காவுடை யாதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே." [75]

என்னுந் திருப்பதிகத்திற் சிறப்பித்துப் பாடினார்.

(திருப்பாச்சிலாச்சிராமத்தில் நிதிக்குவை பெற்றது).

பின்னு முள்ள தலங்களைப் பாட விரும்பி அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பாச்சிலாச்சிராமம் என்னுந் தலத்துப்

---

† உறையூர்ச் சோழ மகாராஜன் ஆரம் தரித்துக்கொண்டு காவிரியில் ஸ்நாநஞ் செய்தபோது ஆரம் நதியில் விழுந்துவிட "சிவபிரானே கொண்டருளுக" என்று ராஜா பிரார்த்திக்க, அந்த ஆரம் திரு மஞ்சனக் குடத்திலே அகப்பட்டுத் திருவானைக்கா ஈசருக்கு அபி ஷேகஞ் செய்யும்போது அவர் திருக்கழுத்தில் விழுந்ததாகச் சரித் திரம்.

பிரானைப் பொருள் வேண்டி யிரக்க அவர் ஒன்றும் அருளா தொழிய மனம் நொந்து,

"வைத்தனன் தனக்கே தலையுமென் னுவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கா லுவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகி லிவரலா
தில்லையோ பிரானார்." [14]

என வரும் திருப்பதிகத்தைப் பாடி நிதிக்குவை பெற்று மகிழ்ந்தனர்.

பின்னர், அப்பதி நீங்கித் திருப்பைஞ்ஞீலி, ஈங்கோய் மலை என்னுந் தலங்களைத் தரிசித்துப் பாண்டிக் கொடு முடி சேர்ந்து அங்கு,

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சி வாயவே." [48]

எனவரும் நமச்சிவாயத் திருப் பதிகத்தைப் பாடினர். அங்கிருந்து பல தலங்களையும் பாடிச் சென்று பேரூருக்கு வந்தனர். வந்தவர் திருக்கோயிலினுட் சென்றனர். சென்றவர் இறைவரைக் கண்டிலர். இறைவரோ ஒரு திருக்கூத்தியற்ற நினைத்துத் தமது தேவியொடும் மக்க ளொடும் பேரூர்ப் புறத்துள்ள வயலிற் றாம் பள்ள னாகவும் பச்சைநாயகி பள்ளி (பள்ளச்சி) யாகவும்

(இன்னும் வரும்)

# மகான்களின் திருவாக்கு

கற்றவர் என்பவர் யாவர்? கற்றபடி நிற்பவரே— மகம்மது நபி.

கடவுள் தொழிலை மனிதனுக்கு அவசியமாகச் செய் திருக்கின்றார். ஜன சமூகம் அதை அவன் கடைமையாகச் செய்திருக்கின்றது. பழக்கம் அதை இன்பமாகச் செய்து விடும்—காப்பல்.

சுகத்தைத் தேடுகிறவனுக்கு வித்தை எப்படி வரும்? படிக்க விருப்ப முள்ளவனுக்குச் சுக மில்லை. சுகத்தை விரும்புகிறவன் படிப்பை விட்டுவிட வேண்டும். வித்தை விரும்புகிறவன் சுகத்தை விட்டுவிட வேண்டும். அஃதாவது கஷ்டப்பட்டால் தான் வித்தை வரும்—பாரதம்.

அழகுடையவனானலும், சத்குலத்தில் உதித்தவனானலும், வித்தை யில்லாதவனயின் அவன் வாசனையில்லாத புஷ்பம்போல் வியர்த்த மாகின்ருன்—

நேரத்தில் படுப்பதும் நேரத்தில் எழுந்திருப்பதும் ஒருவனை ஆரோக்கியவானயும், பாக்கியவானயும், புத்தி யுடையவனயும் ஆக்கும்—சார்லஸ் கிங்கஸ்லே.

தயை முக்கியமான தர்மம். ஈகை கீர்த்திக்கு முக்கிய ஆதாரம். சத்தியம் சுவர்க்கத்திற்கு முக்கிய சாதனம். நல்லொழுக்கமே சுகத்திற்கு முக்கிய சாதனம்—பாரதம்.

விதையில்லாவிட்டால் வயல் எப்படிப் பலனைக் கொடுக் காதோ அதுபோலவே மனித யத்தினமில்லை யெனில் தெய்வானுகூலத்தினல் பயன் இல்லை—பாரதம்.

சிறிது ஜலம் தங்கக்கூடிய சிறு குழிகள் நூறை விட ஒரு கிணறு மேலானது. நூறு கிணறுகளைக் காட்டிலும் ஒரு யாகம் மேலானது. நூறு யாகத்தைவிட ஒரு குமாரன் மேலானவன். நூறு குமாரர்களைவிட ஒரு சத்தியம் மேலானது—பாரதம்.

# மகான்களின் திருவாக்கு

தர்மத்தைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதே மோகம். தானே பெரியவனென்றெண்ணுவதே கர்வம். தர்ம காரியங்களைச் செய்யாம லிருப்பதே அசட்டை. துக்கிப்பதே அஞ்ஞானம்—பாரதம்.

தன்னைப் பாட்டு பாடுவோன் இஷ்டப்படி தின்று திரியலாம். உலகத்தின் பெரும் பெரும் ஜனசமூகங்களுக்கு வீர காவியங்களாகும் பாரகாவியங்கள் இயற்றுவோர் மாம்ஸம் சாப்பிடுவதை நிறுத்திக் காய் கிழங்குகளைச் சாப்பிட்டுத்தான் தண்ணீர் குடிக்க வேண்டும்—மில்டன்.

பிறர் குற்றம் காண்பதும் தம் குற்றம் மறப்பதும் மடமையின் லட்சணம்—ஸிஸரோ.

பிழை செய்து வீழ்ந்தாரை மன்னித்து, அன்பால் உயர்த்தும் ஆநந்தத்திற்கு இணையாக இவ்வுலகில் எதுவும் இல்லை—இப்ஸன்.

விடா முயற்சி செய்பவரிடம் விண்ணவர் விரைந்து வருவர்—ஜோராஸ்டர்.

பொறாமை, அதிகப் பிரசங்கம், பணக்கொழுப்பு முதலியவை நாசத்திற்கு முக்கிய காரணங்கள். குருவுக்கு அவமரியாதை செய்வது, அவசரம், அசட்டை ஆகிய இவை மூன்றும் படிப்பிற்குச் சத்துரு—பாகவதம்.

ஐசுவரியம் வரும், போகும். பண மில்லாதவனாகவிருந்தாலும், நல்ல நடக்கை யுடையவனாக விருந்தால் சம்பத்துடையவனாவன். நல்ல நடக்கையில்லாதவனே யில்லாதவன் ஆகையால் அதிக பிரயாசைப்பட்டாவது நல்ல நடக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்—பாகவதம்.

கீர்த்தியைக் காப்பாற்றிக் கொள். அதுவே உத்தமமான பலம். கீர்த்தியைப் போக்கிக் கொண்டவன் ஜீவனோடிருந்தாலும் பிரயோஜன மற்றவனென்று சொல்லப்பட்டிருக்கிறது—பாகவதம்.

திரிதண்டத்தைத் தாங்குதல், மௌனமாக விருத்தல், சடையை வளர்த்தல், தலையை மொட்டையடித்துக்

கொள்ளுதல், மரப்பட்டைகளையும், தோல்களையும், வஸ்திர மாகத் தரித்தல், விரதஞ் செய்தல், ஸ்நானஞ் செய்தல், யாகஞ் செய்தல், சரீரத்தை வாடும்படி செய்தலாகிய இவை களெல்லாம் மனம் களங்கமற்றிராத பட்சத்தில் மோச மாகிறது. வெளி வேஷத்தினுல் பிரயோஜன மில்லை. மனத் தைப் பரிசுத்தமாகச் செய்து கொண்டு தர்மங்களைச் செய்யவேண்டும்—பாகவதம்.

முகத்திலும் தலையிலும் நரை மயிர் இருப்பதினு லேயே எவனும் பெரியவனுக மாட்டான். வயதில் சிறியவ னுக விருந்தாலும் நல்ல ஞானமுடையவனே உண்மையான பெரியவ னென்று தேவர்கள் நினைக்கிருர்கள்—பாகவதம்.

பிறப்பும், கிரியைகளும், வேதஞானமும், சந்தானமு மாகிய இவைகள் பிராமணத் தன்மைக்குக் காரணமாக மாட்டா. நல்ல நடக்கையே அதற் குண்மையான காரணம்—பாகவதம்.

பாலியம், அழகு, பிராணன், ரத்தினங்கள், சம்பத்து, பந்துக்கள், சினேகிதர்களாகிய இவைகள் நிலையுள்ளவைக ளல்ல. ஆகையால் புத்திமான் இவைகளில் அதிக ஆசை வைத்துக் கெட்டுப் போகமாட்டான்—பாகவதம்.

பிராணிகளை வருத்தப்படுத்தாம லிருப்பதே அதிக மேலான தர்மம். பொறுமையே நல்ல பலம். ஆத்ம ஞானமே எல்லாவற்றுள்ளும் மேன்மையான ஞானம். வாய்மையே உத்தமமான விரதம்— பாரதம்

கடவுள் பிறப்பில்லாதவர். அதிகப் பிரகாசமுடையவர். காணப்படாதவர். ஒன்றிலும் ஆசையில்லாத பரிசுத்தமான ஞானிகள் தங்களுடைய தியானத்தினுலேயே அவரை அடைகிருர்கள்—பாகவதம்.

வேதங்களின் கடைசி முடிவு சத்தியம். சத்தியத்தின் கடைசி முடிவு ஆசைகளை ஒழித்தல். ஆசைகளை ஒழித்தலின் கடைசி முடிவு முத்தி. இது எல்லோருக்கும் பொதுவான விதி—பாகவதம்.

# மனோன்மணீய வசனம்

(S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L)

## அதிகாரம் I : ஜீவகன்.

முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டிலே மதுரைமா நகரில் ஜீவகன் என்ற பாண்டிய னொருவன் அரசு புரிந்து வந்தான். இவன் உத்தம ஒழுக்க முடையவன்; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; பளிங்குபோலக் களங்கமற்ற நெஞ்சினன். நெறிமுறை தவறாமல் இவன் செங்கோல் செலுத்தி வந்ததனாலே இவன்மீது குடி ஜனங்கள் மிக்க அன்புபூண்டு ஒழுகி வந்தார்கள்.

இவ் வரசனுக்கு நெடுங்காலம் புத்திரப்பேறு உண்டாகவில்லை. செல்வம் முதலியவற்றால் யாதொரு குறைபாடும் இல்லாதபோதிலும் பிள்ளையில்லாத வறுமையினால் அரசன் பெரிதும் நைந்து வருந்தினான். தான தருமங்கள் பலவும் செய்தான். எனினும் அவனது விருப்பம் நிறைவேறவில்லை.

அரசனுடைய குலகுரு சுந்தரமுனிவர் என்றொருவர் இருந்தார். இவர் தமது அருமைச் சிஷ்யனை வருத்திக்கொண்டிருந்த கவலையை அறிந்து, அதனை நீக்குதற்குரிய உபாயத்தைச் சிந்தித்து யாகம் ஒன்று செய்துமுடிக்கத் தீர்மானித்தார். வேண்டும் பொருள்களெல்லாம் ஆயத்தமானதும், மிக்க சிறப்போடு யாகம் நிறைவேறியது. அரசனது பிரிய பத்தினியும் ஒரு பெண்-குழந்தையைப் பெற்றெடுத்துத் தனது நாயகனுடைய மனப்பிணியை மாற்றினாள். குழந்தைக்கு மனோன்மணி எனப் பெய ரிடப்பட்டது. ஆனால் சிறிது காலத்திற்குள், தனது செல்வப் புதல்வியின் செல்வ வாழ்க்கையைக் கண்டு ஆநந்திக்கக் கொடுத்துவைக்காமல் தாய் மரண மடைந்துவிட்டாள். ஜீவகனே இப்பொழுது தன் மகளுக்குத் தாயும் தந்தையும் ஆயினான்.

மனோன்மணி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நவயௌவன பருவத்தை அடைந்தாள். லக்ஷ்மியோ

என்று கண்டோர் அதிசயிக்கும்படியான பேரழகும், ஸரஸ்வதியோ என்று பழகினோர் கொண்டாடும்படியான புத்தி சாமர்த்தியமும் வாய்ந்து விளங்கினாள். லோக மாதாவாகிய பார்வதியே இவ ளென்று யாவரும் பக்திகூறும்படி கருணை ததும்பிய மனமுடைய வளா யிருந்தாள். அவள் அன்பின் களஞ்சியம்; அழகின் அர சிருக்கை. பாற்கடலிலே சந்திரோதயம் நிகழ்ந்ததுபோலப் பாண் டிய வம்சம் இப்பெண்மணியால் விளங்கித் திகழ்வ தாயிற்று. இவ ளது குணாதிசயங்களைப் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தாதவர் ஒருவரு மில்லை. முற்றத்துறந்த முனிவர்கள் கூட இவளிடம் ஆராத அன்பு பூண்டிருந்தார்கள். ஒருசமயம் சுந்தரர் ஒரு யாகம் செய்துகொண் டிருந்தார். யாக அக்கினி தழைத்தோங்காது மங்கிக்கொண்டே யிருந்தது. வந்திருந்த முனிவர்களெல்லாரும் பிரார்த்தனையோடு அவிசு சொரிந்தார்கள். அக்கினி தழைக்கவில்லை. அரசன் முதலிய யாவரும் யாது பிழை நேர்ந்ததோவெனக் கலக்கமுற் றிருந்தார்கள். அப்பொழுது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மனோன்மணிச் செல்வி விளையாட்டாக அவிசு நெய் யெடுத்து யாக குண்டத்தில் சிறிது கொட்டினாள். உடனே அக்கினி பொங்கி யெழுந்து முனிவர்களுக் கெல்லாம் மிக்க மகிழ்ச்சியை விளைவித்தது. அன்று தொட்டு சுந்தரமுனிவர் முதலிய பெருந்துறவிகள் மனோன்மணியைத் தங்கள் தலையில் அணிந்து கொள்ளும் சிரோமணியாகப் பாவித்து வந்தார்கள்.

ஆனால் பாண்டிய நாட்டில் ஒருவன் மாத்திரம் மனோன்மணி யின் நன்மையை விரும்பாதவனா யிருந்தான். அவன் யாரெனில் ஜீவக அரசனது மந்திரியாகிய குடிலனேயாம். பொல்லாத வஞ்ச கன்; சூதே உருவெடுத்து வந்தது போலுள்ளவன்; தன்னய மன்றி வேறொன்றினையும் கருதாதவன்; ஆனால் முற்றும் நல்லவன் போலவே எப்பொழுதும் நடிப்பவன்; தனது வஞ்சகக் கருத்தை மறைப்பதற் கென்றே தான் கற்ற கல்வி யனைத்தையும் எடுத்து எடுத்து விளம்பு வன். அதிபுத்திசாலி; அதிதந்திரசாலி.

இம்மந்திரி அரசனுக்கு மிகவும் உண்மை யுள்ளவன்போல நடந்து அவனை யெளிதிலே தன் வசப்படுத்திக் கொண்டான். நாளடைவில் குடிலனது சொல்லன்றி வேறொருவர் சொல்லும்

ஜீவகனது செவியில் ஏறுவதில்லை யென்றாயிற்று. மதுரை நகர் வாசிகள் குடிலனது வஞ்சனையை ஏற்கெனவே அறிந்திருந்தார்கள். இப்பொழுது முற்றிலும் மந்திரி வசப்பட் டொழிந்தான் மன்னனென்பது தெரிந்ததும், தங்கள் மனோன்மணித் தாய்க்கும் தங்கள் நாட்டிற்கும் ஏழை யரசனுக்கும் யாது நேரிடுமோ என்று பெரிதுங் கவலை யடைந்தார்கள். ஜீவகன் மீது பரிவும் குடிலன் மீது வெறுப்பும் நாட்டில் அதிகரிக்கத் தொடங்கின.

ஜனங்கள் தனது உட்கருத்தைத் தெரிந்து தன்னை வெறுக்கிறார்கள் என்பதைக் குடிலனா அறியாதிருப்பவன்! இனிமேல், தன் மனம்போன படி யெல்லாம் அரசனை யாட்டித் தனது செல்வத்தையும் செல்வாக்கையும் வளர்த்திக் கொள்ளப் பரம்பரை ராஜதானியாகிய மதுரை இடங்கொடா தென நன்றாக உணர்ந்தான். அரசனை வேறொரு தலை நகர்க்கு அழைத்துச் செல்லுதலே தக்கதென்று தெரிந்து அவ்வண்ணம் தீர்மானித்தான். இவ் வுத்தேசத்தோடு மதுரை நகர் வாசிகளைக் குறித்துப் பற்பல தூஷணைகள் அரசனிடம் சொல்லி அந் நகரை வெறுக்கும்படி செய்தான். இதுவுமன்றி வேறொரு மந்திரோபதேசமும் நடந்தது. ஜீவகனது உள்ளத்தின் அடிப்படையில் வேரூன்றிக் கிடந்த ஆசை யொன்று உண்டு. என்றும் அழியாப் பெரும்புகழ் தனக்குத் தேடிக் கொள்ள வேண்டுமென்பது தான் அது. இதனை நன்றுணர்ந்த குடிலன் புதிதாயொரு தலைநகர் அமைத்துப் புதிய கோட்டை முதலியன இயற்றிப் புதிய அரசியல் நெறியைக் கைக்கொண்டால், அரசனது பெயர் உலக முள்ள அளவும் நிலைநிற்க வல்லதாகும் என்று அவனுக்கு அடிக்கடி வற்புறுத்தி அவனது ஆசையை வளர்த்தான். இந்த ஆசை வார்த்தையில் ஜீவகன் மயங்கி வீழ்ந்தான்; வேறொரு நகரை இராஜதானியாக்க உடன்பட்டான். திருநெல்வேலியே தக்க தலை நகரென நிச்சயிக்கப்பட்டது.

அரசன் தனது செல்வப் புதல்வியோடும், குடிலன் தன் மகனாகிய பலதேவனோடும் திருநெல்வேலிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். மனோன்மணியின் தோழியாகிய வாணியும் இவள் பிதாவாகிய சகடர் என்ற பிரபுவும் உடன் சென்றார்கள். அரசனது உண்மைச்

சிநேகிதனாகிய நாராயணன் என்பவனும் பிரிவாற்றாது நெல்லை சென்றடைந்தான். புதிய தலைநகரில் கோட்டை முதலியன வெல்லாம் குடிலனது நோக்கப்படியே அமைக்கப் பட்டன.

## அதிகாரம் II: சுந்தரர் வருகை.

புது ராஜதானி அமைத்து வெகுகாலம் ஆக வில்லை. ஒருநாள் காலையில் நெல்லைநகர் விசேஷமாய் அலங்காரஞ் செய்யப்பெற்று விளங்கிற்று. திருவிழா ஏதேனும் நிகழ்கின்றதோ எனச் சந்தேகம் கொள்ளும்படியா யிருந்தது. வீதியெங்கும் ஆரவாரமும் பேரொலியும் முழங்கித் ததும்பின. அணிபெற வகுத்த யானைகள் பிளிறி வீறிட்டு நின்றன; ஒழுங்குபடக் கொய்த பிடரியைக் குலுக்கிக் குதிரைகள் கனைத்து நிரையாய் ஒழுகின; முரசுகள் ஒலித்து விம்மின; இடையிடையே எல்லாச் சத்தங்களுக்கும் மேற்பட்டுச் 'சுந்தரமுனிவா! வந்தனம்!! வந்தனம்!!!' என்று ஜனங்கள் இரைந்து முழங்குவது கேட்க லாயிற்று. எள் விழவும் இடமில்லாத படி. நெருள் திரண்டிருந்தது. யாவரும் பக்தி சிரத்தையோடு நின்றுகொண் டிருந்தார்கள்.

இவ்வித கோலாகலத்துடன் சுந்தர முனிவர்க்கு நெல்லையில் வரவேற்பு நிகழ்ந்தது. முனிவர் ஜீவக அரசனது குலகுரு என்று முன்னமே கூறினோம். மதுரையை விடுத்துக் கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலையில் ஜீவகனுக்கு யாது விளையுமோ என்ற கவலை முனிவரது சிந்தையில் குடிகொண்டது. மேலும் மனோன்மணிச் சிறுமி பாண்டிய வம்சம் இனித் தழைத்தோங்குதற்கு மூலமாய் விளங்குபவள். அவளுக்கு ஏதேனும் அபாயம் நேரிடின் இராஜ வம்சமே அடியற்றுப் போய்விடும். குடிலனது ஆழ்ந்த சூழ்ச்சியில் மனோன்மணி என்ன கதியை அடைவாளோ என்ற பெருங்கவலை அருட்கடலாகிய முனிவரது திருவுள்ளத்தை அரித்தது. இக்காரணத்தால், ஜீவகனையும் அவனது அரும்பெற்ற புதல்வியையும் பிரிந்து மதுரையிலே தங்கியிருக்கச் சுந்தர முனிவர் சிறிதும் ஒருப்படவில்லை. அரசனையும் அவனது வம்சத்தையும் எவ்வாறேனும் காத்தல்வேண்டு மென்று கங்கணம் கட்டித் திருநெல்வேலிக்கருகில் ஓர் ஆச்சிரமம் இ[illegible]றி அதில் அமர்ந்தருள முனிவர்

திருவுளங்கொண்டனர். தமது கருத்து முற்றுப்பெறுவதற்காகவே அவர் நெல்லைக்கு எழுந்தருளியது.

தன் குலகுருவை அரசன் தனது அரண்மனை வாயிலில் வர வேற்றுக் கொலுவிருக்கை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனன். இம்மண்டபமும் இன்று விசேஷ அலங்காரத்துடன் பிரகாசித்தது. முனிவர் எழுந்தருளி யிருப்பதற்கெனப் பொற் சிங்காதனமொன்று நூதனமா யமைக்கப் பட்டது. பூஜாதிரவியங்கள் பலவும் சேக ரித்து வைக்கப் பெற்றிருந்தன. அரசனும் சுந்தர முனிவரும் அவரது சிஷ்யர்களி லொருவரான கருணாகரரும் நகரவாசிகளும் கொலுமண்ட பத்தினுள்ளே வந்தவுடன் யாவரும் 'ஜய ! ஜய ! விஜயீபவ ராஜேந் திரா !!' 'ஜய ! ஜய ! விஜயீ பவ ராஜேந்திரா !!' என ஆகோஷஞ் செய்து நின்றனர். ஜீவகன் முனிவரைப் பொற்சிங்காதனத்தில் எழுந்தருளியிருக்கச் செய்து பாதபூஜை யியற்றி அம்மஹான் தனது அரண்மனைக்கு வரப்பெற்ற பாக்கியத்தை வியந்து வணங்கி யிருந்தான். சுந்தர முனிவரும் மன்னவனை வாழ்த்தி 'அவனைச் சூழ்ந்து நிற்கும் பீடையாவும் ஒழிக என்று ஆசிகூறி மனோன்மணி யின் க்ஷேமத்தைப் பற்றியும் நகரத்தாரின் க்ஷேமத்தைப்பற்றியும் அரசன்பால் வினவி யறிந்து சமாதானம் எய்தியிருந்தனர்.

ஜீவகன் புகழ்மீது அளவுகடந்த விருப்பமுள்ளவ னென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. தன்னையும் தனது முயற்சிகளை யும் பிறர் மெச்சிக்கூறக் கேட்பதில் மனம் நிரம்பிய திருப்தியும் சந்தோஷமும் உடையவன். பிறர் புகழ்ந்து கூறுங் கடப்பாடு உடையவரென்றும் தனக்கு அப்புகழ்ச்சியை அவரிடமிருந்து எதிர் பார்க்கும் உரிமையுண்டென்றும் கருதினவன். இப்பொழுது முனிவர் தன்னைப் புகழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது என மகிழ்ந்து, தான் நெல்லையில் இயற்றுவித்த அரண்மனை கோட்டை முதலிய வற்றை அவர் கடைக்கண் சாத்தி ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆசா ரம் வழுவாது பிரார்த்தித்து, அக்கோட்டை கொத்தளங்களை யெல் லாம் அவருக்குச் சாவகாசத்திற் காட்டும்படி தனது மந்திரியாகிய குடிலனுக்குக் கட்டளையிட்டான்.

குடிலனோ, சாவகாசத்திற்கும் சௌகரியத்திற்கும் இடங்கொ டாது, உடன்தானே கோட்டையின் பெருமைகளைப் பற்றிக் கடல்

மடைதிறந்தது போலப் பேசத் தொடங்கிவிட்டான். இவன் நெல்லை நகர் மாந்தரைத் தன்வசமாக வசீகரிக்கும் உட்கருத்துள்ளவன். தனது அறிவாற்றல் வாக்கு சாதுரியம் இவற்றின் மூலமாகத் தன் பெருமையை உணர்ந்து ஜனங்கள் தன்னைச் சார்ந்து தனக்கு அடங்கி நிற்பார்களென்று எண்ணினவன். தன் சொல் வன்மையால் ஜீவகனை மதிமருட்டித் தன்பால் அளவுகடந்த மதிப்புக் கொள்ளும்படி செய்யக் கருதியவன். அன்றியும் முனிவர்மீது ஜீவகன் கொண்ட பக்தி விசுவாசத்தைச் சீக்கிரம் கெடுத்துவிட வேண்டுமென்ற ஆத்திரமும் உடையவன். இதற்காக முனிவரிடம் அவர் மனதுக் கிசையாதன சிலவற்றை விளம்பி அவர் தன்னைத் தடுத்து ஏதேனும் சொல்லின் அதன் மூலமாய் ஜீவகனுக்கு வெறுப்பு உண்டாக்க எதிர்பார்த் திருந்தான்.

இக்குடிலன் தென் பாண்டி நாட்டின் சிறப்பினையும், இமய மலையினுஞ் சிறந்து நிற்கும் மலயத்தில் உற்பத்தியாகிக் கங்கையினும் காவிரியினும் பெருமை மிகுந்து,

> 'தடம்பணை தவழ்ந்து மடமயில் நடம்பயில்
> வளம் பொழில் கடந்து குளம்பல நிரப்பி
> இருகரை வாரமுந் திருமக ளுறை யுளா'

கச்செய்து வருகின்ற புண்ணிய தாமிரவர்ணியின் எண்ணரும் புகழினையும் இத்தகைய நதி வலம் வருதலால் அழகுபெற இருந்த நெல்லைநகரின் எல்லையில் மாண்பினையும் பலபடப் புராணம் விரிப்பது போல விரித்துரைத்தான். பின்னர், ஆதிசேஷனது தலை தெரியும்படியாக அகழ்க்கிடங்கு ஆழ்ந்துள்ளதென்றும், அகழினையடுத்துள்ள கோட்டைச்சுவர் ஆகாயத்தை யளாவிச்சென்று சூரிய மண்டலத்தைத் தடவுகிறதென்றும், கோட்டை மீதுள்ள கொடிகளும் அங்ஙனமே வானளாவி நின்று மதியின் மருவைத் துடைக்கிறதென்றும் கவி சாமர்த்தியம் காட்டினான். இதன்மேல், கோட்டையில் அமைக்கப் பெற்ற பாதுகாப்பு யந்திரங்களைக் குறித்து

> 'வெயில் யெயிலினங் காக்க இயற்றிய
> எந்திரப்படைகளும் தந்திரக்கருவியும்
> பொறிகளும் வெறிகொளும் கிறிகளும் எண்ணில'

என்று தொடங்கிப் பிராசம் தவறாமல் வர்ணிக்கச் சென்றான்.

இவ்வளவில் சுந்தரமுனிவரது பொறுமை முற்றும் தீர்ந்து விட்டது. உண்மையோடு மாறு பட்ட அலங்காரப்பேச்சும், உள்ளூறக்கிடந்த தற்புகழ்ச்சி விருப்பமும், யாவரையும் ஏமாற்ற வேண்டுமென்ற வஞ்சகக் கருத்தும், இனி யாதொன்றுஞ் செய்தற்கில்லை யென்ற அமைதி யுணர்ச்சியும் முனிவருக்கு அருவருப்பு உண்டாக்கின. அங்கே கூடியிருந்த சிலர் குடிலனை நோக்கி வாய்திறந்த வண்ணமாய் வியந்திருந்தனர். முனிவரும் அவனை முகம்பார்த்து 'நிறுத்து' என்று சொல்லுதற்குக்கூட மனமில்லாதவராய்ப் பெருமூச்செறிந்து 'இவைபோல்வன வெல்லாம் நான் கண்டிருக்கிறேன். இவற்றைக் காட்டிலும் உறுதியாக ஏதேனும் உளதோ? சொல்' என்று ஜீவக னிடம் கூறி யெழுந்தனர்.

ஜீவக அரசன் தான் எதிர்பார்த்த வண்ணம் புகழாது தன் முயற்சியை யொரு பொருளாகக்கூட முனிவர் கருதாதது பற்றி மனம் வருந்தினன். தனது கோட்டை கொத்தளங்களைப் பகைவர்கள் ஒருகாலும் வென்று கைக்கொள்ள முடியாது என்பதை வற்புறுத்தி, இக்கோட்டை முதலியவற்றைக் காட்டிலும் ஓர ரசனுக்கு வேண்டியது வேறொன்றும் இல்லையென்று சொல்லி, என்றாலும் கோட்டை யமைப்பில் ஏதேனும் குற்றமிருப்பதாகச் சுவாமிகள் கூறுவார்களாயின், அதனை நீக்கத் தான் தயாராயிருப்பதாகவும் அரசன் தனது குல குருவுக்குத் தெரிவித்தான்.

தமது உட்கருத்தை யுணராது இறுமாந்திருக்கும் அரசனது நிலைமையைக்குறித்து முனிவர் பெரிதும் இரக்கங்கொண்டார். இவ்வுலகில் நிலையாமை சால நிலைபெற்றிருக்கும் இயல்பினையும் பள்ளம் மேடாகவும் மேடு பள்ளமாகவும் ஆகும் கால இயற்கையினையும் ஜீவகனுக்கு எடுத்துக் கூறினர். கடைசியாக கேடு நேரிடக்கூடிய வழிகளை முற்ற ஆராய்ந்து அதனை வருமுன் காத்தலே அரசனுக்குரிய தொழில்களில் முதன்மை பெற்றதென்று உபதேசஞ் செய்து மனோன்மணியைத் தாம் காண விரும்புவதாகச் சொல்லினர். அதற்காக அந்தப்புரத்திற்குச் சிவிகையில் எழுந்தருளினர்.

குடிலனும் தனது கருத்து நிறைவேறுவதில் சந்தேகமில்லை யென்று மகிழ்ச்சி கொண்டிருந்தான்.

---

# ஜவுளி வியாபாரம்

(COPYRIGHT.)

(ஸ்ரீமான் M. A. நெல்லையப்பர்.)

இந்த நாகரீகமான இருபதாம் நூற்றாண்டிலும் நமது தமிழ் நாட்டில் நடத்தப்பட்டு வரும் எல்லாத் தொழில்களையும் விட ஜவுளித்தொழில் மிக்க விசேஷமாக இருந்து வருகிறது. ஊணுக்கான உழவுத் தொழிலும், உடைக்கான ஜவுளி வியாபாரமும் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவை யாகும். வாழ்வின் அஸ்திவாரமான இரண்டையும், கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு சீர்திருத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். சென்னையிலும், பிரசித்திபெற்ற நகர்களான கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலான எந்த விடத்திலும் காலத்துக்கேற்ற முறையில் வியாபாரம் நடைபெறவில்லை. இன்னும் அத்தொழில் நடைபெறும் முறையைக் கவனிக்கிலோ, பொய், சூது, வாது, கண்கட்டு வித்தை, பெருமழை பொழிந்தது போன்ற பேச்சுகள் இவைகளுக்கெல்லாம் அது உறை விடமாகக் கொண்டிருக்கிறது.

வரம்பில்லாத லாபத்தை விரும்பி யன்றோ இத்தகைய தீய வழிகளை அனுசரிக்க வேண்டியதா யிருக்கிறது. மனோ விலாசத்தில் நன்றாய் ஆலோசனை செய்து கூர்மையான புத்தியைக் கொண்டு ஜவுளி வியாபாரத்தை நடத்தினின் வியாபாரம் விருத்தியாய்க் கொண்டிருக்கும். சில ஜவுளிக் கடைகளில் உயர்ந்த வஸ்திரங்களைப் பொட்டணமாகக் கட்டி வைத்திருக்கிறார்கள். இன்னும் சில கடைகளைக் கவனித்தால் அங்கு நடப்பது ஜவுளி வியாபாரம் என்று தெரிந்துகொள்ள முடியாது. குருட்டு யுக்தியும் கோணல் புத்தியும் படைத்த சிலர், வேடன் காட்டில் வலை வீசுவது போல வியாபாரத்துக்கு வருவோரை மாய வலைக் குட்படுத்தச் சிந்திக்கின்றார்கள். காலத்தை அனுசரித்துத் தொழிலை நடத்தாமல் பழைய வழக்கங்களை இன்

ஹும் ஆதரித்து வருவது நியாயமன்று. ஒருவர் ஜவுளி வியாபாரத்தை ஆரம்பித்தால் அதனை அபிவிர்த்தி செய்யவே ஊக்கமுள்ளவரா யிருக்கவேண்டும். கௌரவமாகக் கறார் என்று சிலர் பலகைகளில் எழுதித் தொங்க விட்டுக் கொண்டு, ஒரு ரூபாய்க்குக் காலணு தள்ளுபடி என்று சொல்லுகிறார்கள். ஜவுளி வியாபாரம் ஒரு முறையாய் நடத்தப் படுகிறதில்லை. சில வியாபாரிகள் தங்களுக்கு மற்றவர்களை விடத் தொழில் மர்மம் விசேஷமாய்த் தெரியும் என்ற கர்வங் கொண்டவர்களா யிருக்கிறார்கள். தாராள மான சிந்தையோடு தொழிலை நடத்தவேண்டும். காலையில் கடை வைத்து மாலையில் குபேரனுய்விட வேண்டுமென்று சிலர் பேராசை கொண்டு மிருக்கிறார்கள். தொழிலை நடத்தும் முறை கொள்ளை யடிப்பது போலவும் இருக்கிறது. இத்தகைய தீச்செயல்களை விரித்துரைப்ப தென்றால் தனி நூலாய் விடும். வஸ்திரம் மானத்தைக் காப்பாற்றுதற்கு முதன்மையான வஸ்து. வேரில் பூச்சி அரிப்பதுபோல ஜவுளி வியாபாரிகள் அளவுக்கு மிஞ்சிய லாபத்தைச் சேர்த்து விற்கிறார்கள். ஜவுளி வியாபாரம் செய்யும் பிரபுக்களே, இனியாவது புது முறைகளை அனுசரியுங்கள். 1918-ம் வருடம் நாம் பம்பாய்க்குப் போயிருந்தபோது அநேக ஜவுளிக் கடைகளையும், ஒருங்கே அமைந்துள்ள மூல்ஜி செட்டா ஜவுளி மார்க்கட்டையும் ஊன்றிக் கவனித்தோம். அவர்களில் ஒருவர் இருபத்தைந்து கிளை ஜவுளிக் கடைவைத்து நடத்துகிறார். அவரைப்பற்றி முதலாவது விசாரிக்கும்போது அவர் ஆதியில் பரம ஏழை யென்றும் புத்தி சாதுரியத்தாலேயே விருத்தியானவ ரென்றும் இருபது லட்சத்துக்கு அதிபதி யென்றும் கேள்விப்பட்டோம். அவரை நேரில் கண்டு வார்த்தையாட நினைத்து அவரிடம் சென்றிருந்தோம். ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருக்கும். அடுத்த ஞாயிறன்று காலையில் வந்தால் பேசலாம் என்றார். அவர் சொன்ன படியே காலையில் சென்றிருந்தோம். அவர் சொன்ன தாவது :—

“நான் தொழில் துறையில் இறங்கும்போது, அதாவது முப்பது வருஷத்துக்கு முன் என் கையில் காசு மில்லை, சிநேகிதர்களு மில்லை, ஆனால் எப்படியாவது

மேன்மையடைய வேண்டும் என்று என் மனதுக்குள்ளே தீர்மானித்துக் கொண்டேன். எவ்வழியில் என்பது எனக்குத் தெரியாம லிருந்தது. வரவர என் எண்ணம் பலிக்க வேண்டு மென்ற கருத்தால் மனம் புதிய புதிய யுக்திகளை உற்பத்தி பண்ணிக்கொண்டே யிருந்தது. நான் அதிகம் படிக்கவில்லை. மெட்ரிகுலேஷன் வரை படித்தேன். ருஸ்தம்ஜி கம்பெனியில் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு அமர்ந்தேன். அக்கம்பெனியில் 23 வயது வரை, அதாவது ஐந்து வருஷம் உத்தியோகம் செய்தேன். அவர்கள் ஜவுளி வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். என் மூளை எப்பொழுதும் ஊக்கமாய் வேலைசெய்துகொண்டிருந்தாலும் ஆறுமாத காலம் எஜமானர் இட்டவேலையைச் செய்துகொண்டு, அவருடைய நோக்கத்தையும் எண்ணத்தையும் அறிந்து வந்தேன். சமயம் வாய்க்கும் போதெல்லாம் அபிவிர்த்திக்கான வழிகளைச் சொல்லிவந்தேன். பட்டு, டுவில், செர்ஜு, பிளானல், வேஷ்டி இவை பல ரகம் இருந்துவந்தன. தையல் தொழிலையும் சேர்த்துக் கொண்டோம். அதினால் அபிவிர்த்திக்கு மார்க்கமுண்டாயிற்று. தைத்தவைகளைக் குறித்த காலத்தில் சொல் தவறாமல் கொடுத்துவந்தோம். முதல் வருஷம் தீபாவளியன்று 100 ரூபாய் இனமாகக் கொடுத்தார். ஐந்து வருஷத்தில் ஒரு சிறு தொகை சம்பாதித்துக் கொண்டேன். சொந்தத்தில் தொழில் செய்ய எண்ண முண்டாயிற்று. நிர்வகிக்கக் கூடிய திறமையும் அனுபவமும் இருப்பதால் நினைத்தபடி செய்யத் தீர்மானித்தேன். 'பொறுப்பு' என்பதை நினைக்கும்போது என் சிந்தை கலங்கிற்று. என்றாலும் தைரியம் தீவிரமாகவே யிருந்தது. தொழில் முதலாவது மெதுவாய் நடந்து வந்தாலும் சிலகாலம் ஆனபிறகு திருப்தியாய் நடை பெற லாயிற்று. எனது அபிவிர்த்திக்குக் காரண மென்னவென்றால் சில கொள்கைகள். அவற்றைப் பிடிவாதமாகக் கையாண்டு வந்ததினால்தான் என் தொழில் நன்றாய் விருத்தியாயிருக்கிறது என்று திட்டமாய் நினைக்கிறேன். அனுபவத்திலுள்ள சில கொள்கைகளைச் சொல்லுகிறேன்.

1. கவனிப்பு, கஷ்டப்பட்டு வேலைசெய்தல், ஒழுங்கு. 2. ரொக்க வியாபாரம் (தமிழ் நாட்டில் ரொக்கம் என்றால் எட்டு நாள் தவணை என்று சில வியாபாரிகள் அர்த்தம்

செய்கிருர்கள். ஒரு கையில் காசு ஒரு கையில் சரக்கு என்ற மாதிரி). 3. விலை பொருளுக்குத் தக்கபடி. கூடியவரை குறைந்த விலை. நியாயமான தென்றே கருதவேண்டும். விலையைக் குறைத்துவிட்டோம். உத்தரவாதம் (காரண்டி) செய்கிறோம், திருப்தி இல்லையெனில் திருப்பிக் கொடுத்து விடலாம், என்ற இவ்வித வழக்கத்தை நான் அனுசரிக்க வில்லை. ஒரே விலை.

வாடிக்கைக்காரர்கள் எனது குணத்தையும் தொழி லின் நிலைமையையும் நன்குணர்ந்தோர்க ளாதலால், எனது தொழிலின் அபிவிர்த்திக்கு அவர்களே காரணமாகும், என்று சொன்னுர்.

இவரது ஊக்கமும் விடாமுயற்சியும் தொழிலின் முன்னேற்றத்துக்கு ஆதாரமானவை என்பதைச் சொல்ல வேண்டுமா? முன்னேற்றமடைய விரும்புவோர், பொரு மை முதலிய துர்க்குணங்கள் இல்லா திருக்கவேண்டும். ஜவுளி வியாபாரத்தால் அவன் பணக்காரனுகி விட்டான், இவன் குபேரனு கிவிட்டான் என்ற எண்ணங்கொண்டு போட்டி வியாபாரம் செய்வோரும் உண்டு. ஒரு வியாபாரி மற்ருெரு வியாபாரி விருத்தியாவதைப் பற்றி வன்கண் ணல்பார்த்துப் பெருமூச்சு விடுகின்ருன். உழைக்கும் வழி யறிந்து பாடுபடாமல் தீயவழியில் மனதைச் செலுத்துவ தால், முன்னேற்றமடைய வேண்டி, பல சூழ்ச்சிகளைச் செய்ய நேரிடுகிறது. பொது ஜனங்களை ஏமாற்றுவதற் கான பொய் சூது வாதுகளைக் கைக்கொள்ள வேண்டியதாகி றது. சமீபத்தில் சிங்கப்பூரிலிருந்து வந்த ஒரு வியாபாரி சென்னையிலுள்ள ஒரு பட்டு வியாபாரியிடம் சென்று, காசி யில் பட்டுவியாபாரம் செய்கிற கே. எஸ். முத்தையா கம்பனி யார்இவ்வூரிலும் ஒரு கிளை வைத்திருக்கிறதாகக் கேள்விப் பட்டேன், அவர்கள் கடை எங்கேயிருக்கிறதென்று கேட் டார். அதற்கு "இந்த ஊரில் அவர்கள் கடையை மூடிக் காசிக்குப்போய் மூன்று மாதமாச்சே" என்று பதிலளித்தா ராம்.மறு நாள் வேறு காரியமாக கோவிந்தப்ப நாய்க்கன் தெரு வழியாய்ப் போய்க்கொண் டிருக்கும்போது முத் தையாகம்பனியாரின் விலாசத்தை ஒரு பெரிய கட்டடத்தில் கண்டு ஆச்சரியப்பட்டார். எந்தத் தொழிலைச் செய்தால்

தான் என்ன? பொய்யின்றி வாழ்தல் சிறப்பன்றோ? எதிலும் சத்தியம் வேண்டும். பரோபகார சிந்தைவேண்டும். தெய்வ பக்தியும் வேண்டும். ஜவுளி வியாபாரிகள் மக்களுக்கு உபகாரிகளா யிருக்கவேண்டுமே யன்றி மோசக்காரர்களாய் நடக்கக்கூடாது. கெடுவான் கேடு நினைப்பான்! 'தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்' என்ற ஆன்றோர் வாக்கினையும் சிந்திப்பார்களாக. ஊக்கமே உயிர்த்துணை யாதலால் அவர்கள் முன்னேற்றமடையச் சிறந்த வழிகளைத் தேடவேண்டும்.

ஜவுளி வியாபாரம் வெளி தேசங்களில் புத்தி நுட்பத்துக் கேற்றவாறு விர்த்தியாகிக்கொண் டிருக்கிறது. புத்தி நுட்பம் சிந்தனை செய்வாருக்கே ஏற்படுகின்றது. ஆகையால் காலதேச வர்த்தமானத்தை அறிந்து சமயோர்ச்சிதமாய்த் தொழில் செய்வதே சாலச் சிறப்புடையதாகும்.

---

# உலகப் போக்கு.

பிரான்ஸ் தேசத்தின் தலை நகரான பாரிஸ் பட்டணத்தில் வருஷந்தோறும் 5200 விவாக ரத்து வழக்குகள் ஏற்படுகின்றன. தேசம் முழுமையிலும் சென்ற வருஷம் சுமார் நாற்பதினாயிரம் வழக்குகள் ஏற்பட்டன. நாகரீகம்!

***

வங்காளத்தில் ஒரு வங்காளியின் தகப்பனார் இறந்து போனார். அவர் தகப்பனாருக்குச் சகல கர்மங்களையும் செய்தார். ஆனால் ஆங்கிலம் படித்த நாகரிக ரானதால், கயாவில் பிண்ட சிரார்த்தம் கொடுக்க மறுத்து விட்டார். சிலகாலம் கழித்து அவர் தகப்பனார் கனவில் வந்து தனக்கு சிரார்த்தம் கொடாவிட்டால் தனது ஆதமாவுக்கு அமைதி ஏற்படா தென்று சொன்னார். பிள்ளை அதனைப் பொருட்படுத்தவில்லை. பின்னும் ஒருமுறை தகப்பனார் கனவில் வந்தார். அத்துடன், அயலூர் ஒன்றில் உத்தியோகத்தில் இருந்த தனது மற்றொரு பிள்ளையிடமும் கனவில் தோன்றி உன் தமையன் சிரார்த்தம் கொடுக்காததால் நீ எனக்குச் சிரார்த்தம் கொடு என்று சொன்னார். இந்தவிஷயத்தைக்குறித்துத் தம்பி தமையனுக்குக்கடிதம் எழுதினார். பின்னர் ஷெ தமையன் தம்பியுடன் கயாவுக்குச் சென்று சிரார்த்தம் கொடுத்துத் தகப்பனருக்கு ஆத்ம திருப்தி செய்தார். இறந்தவர்கள் பிதிர்லோகத்தில் வாழ்கிறார்கள் என்ற உண்மையை இந்த விஷயம் உறுதிப்படுத்துகிற தென்று பங்கிம் சந்திர ராயர் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.

# உலகப் போக்கு

ஆகாய விமானத்தை அழிப்பதற்காக ஒரு புதிய யந்திர பீரங்கி கண்டுபிடித் திருக்கிறார்கள். இது கால் பவுண்டு கனம் உள்ள குண்டுகளைச் சுடும். நிமிஷத்திற்கு 500 குண்டு சுடும். இதன் குண்டுகள் ஐந்து மயில் தூரம் பாயுமாம். இரண்டு மயிலுக்கு அப்பாலுள்ள ஆகாய விமானத்தை ஒரே குண்டால் அழித்துவிடலாமாம்.

***

பட்டுப்பூச்சிகள் வலையிலேயே சில சாயங்களைப் பிரயோகிப்பதால் பல நிறப் பட்டுகளைப் பட்டுப் பூச்சிகளே உற்பத்திசெய்யும்படி செய்யலாமென்று ஒரு பிரெஞ்சு நிபுணர் கூறுகிறார்.

***

ஆபிரிக்காக் கண்டத்தில் கேனியா நாட்டில் ரடால்ப் ஏரிப் பகுதியிலுள்ள பாலைவனத்தில் வாழும் எல்மோலோ என்ற ஜாதியார் மூன்று மணி நேரத்திற்குமேல் நீர் அருந்தாமல் இருந்தால் இறந்துபோய் விடுவார்களாம். ஒரு மணிக்கு ஒரு முறை அவர்கள் நீர் அருந்துகிறார்கள். அவர்கள் எப்பொழுதும், ரடால்ப் ஏரியில் நீந்தி மீன்பிடித்துக் காலங் கழிப்பார்களாம். மீனே அவர்கள் ஆகாரம். அந்த ஏரி சோடாப்பொருள் உள்ளதாதலின் அவர்கள் மட்டுமே அதன் ஜலத்தை அருந்தக் கூடுமாம்.

***

அமெரிக்கா ஐக்கிய நாட்டுக் குடியரசுத் தலைவரின் 14 வயதுள்ள இளைய குமாரன் கூலிட்ஜ் என்பவன் தமது தகப்பனார் பெரிய பதவியடைந்த பின்னரும் ஒருவரிடம் புகையிலைகளைக் கட்டும்வேலையில் இருக்கிறானும். அவன் தினந்தோறும் 9 மணி நேரம் வேலைசெய்கிறான். கூலி 14 ஷிலிங்.

***

இங்கிலாந்தில் சமீபத்தில் காலஞ்சென்ற ஆல்பர்ட் ரசல் பிரைஸ் என்பவர் ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருந்த கெயிசரை அடிக்கும் பெருமை பெற்றவராம். ரசலுக்குச் சொந்தமான யந்திரங்களில் "கெயிசர்" சிறுபிள்ளையா யிருந்தபொழுது கல் எறிந்தாராம். அதற்காக ரசல் கெயிசரை அடித்தாராம். கெயிசரின் கூட வந்த வாத்தியார் திடீரென்று வந்து தடுத்திராவிட்டால் அவர் கெயிசரை நன்றாக அடித்திருப்பாராம்.

***

இனி, மனிதர்கள் தங்கள் சதபூர்த்தித் திருநாளைக் கொண்டாடுவார்கள். அதாவது நூறு வருஷம்வரை வாழ்வார்களென்று ஒரு வைத்தியர் கூறுகிறார். பழங்களையே அதிகமாகச் சாப்பிடுவதால் இங்கிலாந்தில் பணக்காரர்கள் நீண்டநாள் வாழ்கிறார்களென்று அவர் கூறுகிறார்.

# ஹாஸ்யத் துணுக்குகள்.

வெகு நாளாய் ஒருவரை விட்டொருவர் பிரிந்திருந்த இரண்டு சிநேகிதர்கள் ஒரு நாள் தற்செயலாய்ச் சந்தித்துக் கொண்டார்கள். அவர்களிருவருள் ராமன் கொஞ்சம் மந்தபுத்தி யுடையவன் ; அதிகப் படிப்புக் கிடையாது. கிருஷ்ணனோ அதி மேதாவி. விசேஷமாய் ஆங்கிலம் படித்துச் சட்ட பரீக்ஷை முதலிய தேறி பாரிஸ்டர் உத்தியோகத்தி லிருப்பவன். இருவரும் பின் வருமாறு தர்க்கித்துக் கொண்டார்கள்.

ராமன்.—என்னடா ! ஏய் ! அதிகமாய்ப் படிச்சுட்டாத்தான் என்னடாலே ! இவ்வளவு மகிமையா வுனக்கு !

கிருஷ்ணன்.—என்னமோ சொல்லுகிறாயே ! எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே !

ராமன்.—ஏண்டா போட்ட கடிதாசுக்குக்கூடவா பதில் போட முடியவில்லை.

கிருஷ்ணன்.—எனக்கு உன்னிடத்திலிருந்து ஒரு கடிதமும் வரவில்லையே. வந்தால் பதில் போடாம லிருப்பேனா ? நீ கடிதமெழுதாம லிருந்தாலுங் கூடப் போனால் போகட்டுமென்று நேற்று டிஸம்பரில் ஒன்று எழுதியிருந்தேனே !

ராமன்.—எனக்கு ஒன்றும் வரவில்லையே !

கிருஷ்ணன்.—வராம லெப்படியிருக்கும் ?

ராமன்.—(யோஜிக்கவே) ஒருக்கால் நீ அட்ரஸு எழுதாமல் போட்டுவிட்டாயோ, நான்போட்ட லெட்டரில் நான் அட்ரஸு எழுதவில்லை அதனால் தான் கேட்கிறேன்.

***

ஜட்ஜ்.—இது உம்முடைய கை எழுத்தா பாரும்.

ஸாக்ஷி.—எனக்குத் தெரியாது.

ஜட்ஜ்.—நன்றாய்க் கவனித்துப் பாரும்.

ஸாக்ஷி.—நிச்சமாய்ச் சொல்ல முடியாது.

ஜட்ஜ்.—(கோப மூண்டு) ஸரி, தாமதம் வேண்டாம். (கடிதத்தில்) கையெழுத்துப் போடும் பார்ப்போம்.

ஸாக்ஷி.—நான் வித்வானல்ல ஐயா, எனக்கு எழுதத் தெரியாது.

***

குழந்தை.—தாத்தா, சிங்கங்கள் மோக்ஷ லோகத்துக்குப் போகுமோ ?

தாத்தா.—போகாது.

குழந்தை.—ரொம்ப பக்தியாய் இருக்கிறவர்கள்.

தாத்தா.—நிச்சயம் போவார்கள். ஏன் கேட்கிறாய் ?

குழந்தை.—சரி ரொம்ப பக்தியாய் இருக்கிறவரை ஒரு சிங்கம் தின்று விட்ட தென்று வைத்துக் கொள். அப்பொழுது சிங்கம் போகுமோ ?

# நகைகள் தரித்தல்

இத்தேசத்து ஸ்திரீ ஜனங்களுக்குள் நகை நகை யென்ற பேராசை மிஞ்சியதா யிருக்கிறது. ஒருவரைவிட ஒருவர் அதிக நகை போட்டுக் கொள்ளவேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். அநேகர் கந்தைத்துணியை முழங்காலுக்குமேல் கட்டிக்கொண்டு காதிலும் கழுத்திலும் ஆபரணங்களைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். அநேகர் அன்னவஸ்திரத்துக்குக் கூடக் குறைவுள்ளவர்களா யிருந்தாலும் பட்டினி கிடந்தாவது நகைபோட்டுக் கொண்டால் போதுமென்று எண்ணுகிறார்கள். என்னத்தைத் தான் போட்டாலும் இன்னும் காணாதென்கிற ஏக்க மொழியப் போகிறதில்லை. இதனால் வருங் கேடுகளைப் பற்றிக் கொஞ்சமேனு முணராமற் போகிறார்கள். நற்குண நற்செய்கையுள்ள அழகிய பெண்களும் நகையில்லா திருந்தால் நல்லவிடங்களில் வாழ்க்கைப்பட ஏதுவில்லாமற் போகிறது. சில மாதர்கள் நகையினிமித்தம் புருஷனை அறியாமல் வீட்டிலுள்ளவைகளை விற்று வீட்டைக் கெடுத்துப் போடுகிறார்கள். இதனால் "விற்ற வீடு வெறும் வீடு" என்ற பழமொழி உண்டாயிருக்கிறது. உடமை போட்டிருக்கும் ஸ்திரீகளைக் கூட்டிக்கொண்டு ஊர்வழி புறப்பட வேண்டுமானால் திருடர்களால் புருஷர்களுக்கும் அவர்களுக்கும் உண்டாகும் பயத்தைச் சொல்லி முடியுமா? இச்சமயங்களில் ஜீவ நாசம் அடைந்தவர்களும் அநேக ருண்டு.

இந்தச் சங்கடங்கள் மாத்திரமோ பொருள் நஷ்டமும் அதற் கொத்தது வேறே யில்லை. ஒரு நகையை அழித்தால் ஒன்று பாதி தான் இருக்கும். காணமற் போகிறதினால் கஷ்டம். கள்ளனுக்காக எப்போதும் கறிக்குடல் கையி லேந்திக்கொண் டிருக்கவேண்டும். நகை அணிந்துகொள்ளும் ஸ்திரீகளில் சிலர் சோப்பேறிகளாய்ப் புருஷனுக்கும் அடங்காமற் கெட்டுப் போகிறார்கள். அசையாமலும், ஆடாமலும், வேலைசெய்யாமலும் போவதினால் வியாதிகொண்டு நிமிர்ந்து பிள்ளைப் பெறுத மலடிக ளாகிறார்கள். அநேக ஐசுவரியவான்களுக்குப் பிள்ளையில்லாமற் போகிறதற்கு இது ஒரு விசேஷ காரணம்.

ஜூ ஜூ ரெஸ்ட் ஸ்விங் என்ற

# குழந்தைகள் ஊஞ்சல்

(பதிவு செய்யப்பட்டது)

இந்த ஊஞ்சலில் உங்கள் குழந்தை சௌகரியமாயும் சந்தோஷமாயும் கஷ்ட மில்லாமலு மிருக்கும். உங்கள் குழந்தை விழுந்துவிடாது. கால் கைகளின் இயக்கத்திற்குத் தாராளமான வசதி யிருக்கிறது. அதனால் ஜீரணசக்திக்கு அனுகூல முண்டு. வேறு பல சௌகரியங்களு முண்டு. சிறிதாகச் சுருக்கிக் கொள்ளளாம். எந்த இடத்திலும் இஷ்டம்போல் போட்டுக்கொள்ளலாம். நூறு பவுன் நிறைவரை பொறுக்கக் கூடியது. பிரபல வைத்தியர்களெல்லாம் இதனைப் பாராட்டிக் குழந்தைகளுக்கு இதனைச் சிபார்சு செய்கிறார்கள். இத்தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல வகைப்பட்ட மனிதர்களும் இதனைத் தங்கள் குழந்தைகளுக்கு உபயோகித்து இதன் அருமையை பெரிதும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

1. டாக்டர் க்ளப் என்பவர் எங்கள் குழந்தைக்கு உங்கள் ஊஞ்சலை சிபார்சு செய்தார் என்று முசோரி வாசியான பாடிகாட் என்பவர் சொல்லுகிறார்.

2. இன்னும் இரண்டு ஊஞ்சல்கள் எனக்கு அனுப்புங்கள். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி யளித்திருக்கிறது என்று டேரா இஸ்மேல்கான் வாசியான காப்டன் பூஷன் ஐ. எம். எஸ். கூறுகின்றார்.

3. குழந்தை தொட்டிலில் சௌக்கியமாய் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது நான் எவ்வளவோ வேலைகளை செய்ய அவகாசம் ஏற்படுகிறது என்று நாசிக் வாசியான ஸ்ரீமதி தாஸ் அம்மையார் கூறுகின்றார்.

4. 'இந்தத் தொட்டில் எனக்கு மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் அளித்திருக்கிறது. அது மிகவும் பயனுள்ளது, ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும்' என்று கயா நகரத்து வக்கீலான சையத் அஸ்கார் ஈசூப் கூறுகிறார்.

5. 'உங்கள் ஊஞ்சல் கிடைத்தது. அது மிகவும் அழகாயிருக்கிறது. இவ்வளவு பயனுள்ள பொருளை இவ்வளவு குறைந்த விலைக்கு விற்பதுபற்றி நான் உங்களை மெச்சுகிறேன்' என்று லாகூர் பாரிஸ்டரான ஸாகர சந்திரன் கூறுகிறார்.

இந்த ஊஞ்சலை நீங்கள் வாங்கியபின் அது உங்களுக்குப் பிடிக்காவிட்டால் பணத்தைத் திருப்ப அனுப்பத் தயாராயிருக்கிறோம்.

டிலக்சி என்ற முதல்தரம் ஊஞ்சல் ஒன்றுக்கு 6 ரூ. சாதாரண ஊஞ்சல் 3 ரூபா 12 அணா. தபால் கட்டுக்கூலி வகையரா 12 அணா.

உங்கள் குழந்தைக்கு இந்த ஊஞ்சலை உடனே வரவழையுங்கள். இன்றே உத்தரவு அனுப்புங்கள்.

**K. & Keys Co.,**

**Post Box No. 32-5,**

**DELHI.**

## வாரப் பத்திரிகை.

ஆசிரியர் :

பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

வருஷ சந்தா :— உள் நாடு ரூ. **4**. வெளி நாடு ரூ. **6**.

மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர், லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேஸ்வரன் பேட்டை :: :: சென்னை.

---

## லாப மடையுங்கள்!

எங்கள் சொந்த நெசவுச்சாலையில் கைதேர்ந்த நெசவுக்காரர்களால் எல்லா ஜாதிக்காரர்களுக்கு உபயோகமுள்ளதும், சலவைக்கும், தினசரி துவைத்துக் கட்டிக் கொள்ளுவதற்கும் கெட்டிச்சாயமாய் உள்ள சுண்ணடிச் சேலைகள், பளுக்காச் சேலைகள், பட்டுச் சேலைகள், தாவணிகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய பலவித நூதன ஜவுளிகள் ஏராளமாய்த் தயாராகிறது. தேவையான தினசுகள் விபரமாய் இவ்வளவு ரூபாய்க்குள் என்று எழுதினால், அதின்படி வி. பி. மூலமாயும், பாங்க் மூலமாயும் அனுப்பலாகும். பிடித்தமில்லாத தினுசுகள் வாபஸ் எடுத்துக்கொள்ளப்படும்.

விலாசம் :—

**M. R. C. பெருமாள்,**

3-வது லக்ஷ்மிபுரம் தெரு,

மதுரை.

**(S. INDIA.)**

## பி. வி. ராஜன் "பட்டணம் பொடி"

எக்ஸிபிஷன்களில் ஸர்ட்டிபிகேட்டும் அநேக பிரசித்தி பெற்ற டாக்டர்களால் ஸர்டிபிகேட்டும் பெற்றவை.

உயர்ந்த புகையிலையினால் குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் நீண்ட நாள் கெடாமலிருக்கும்படியும் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வெகு நாட்களாக மார்க்கட்டில் நல்ல பெயர் பெற்றுவருகிறது. வெளியூர்களுக்கு விலை சரசமாய் சப்ளை செய்து வருகிறோம். ஒரு தடவை எங்களிடம் தருவித்துப் பார்த்தால் அதன் உண்மை தெரிய வரும். வீசை 1-க்கு டின் உள்பட விலை ரு. 3-10-0. தபால் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம். ஒரு சேர், அரை சேர் டின்களாகவும் அனுப்பப்படும்.

**R. S.** சுகந்த மூக்குத்தூள்.—இது நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதனால் ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லேற்படும் எல்லா வியாதிகளையும், மூளையைச் சேர்ந்த சகல வியாதிகளையும் போக்கி குணப்படுத்தும். புட்டி 1-க்கு விலை ரு0-4-0 } ஒரு சேர் டின்
டஜன் 1-க்கு ,, ரு2-4-0 } 1-க்கு ரு 1-12-0

தபாற் செலவு அல்லது ரெயில் சார்ஜு பிரத்தியேகம்.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

---

## நோட்டீஸ்.

கவனித்து வாசியுங்கள்.

ஸ்ரீமான் கே. ஜக்க நாயுடு, பாரிஸ்டர், கண்ணபுரம்: எழுதுகிறார், "நான் டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம்கில்லர் சோபையுபயோகித்து பார்த்ததில் அது எல்லாவித சர்ம வியாதிகளையும் பூரணமாய் குணப்படுத்துகிற தென்று கண்டறிந்தேன். முகபருவுகளையும் எடுத்து விடுகிறது. டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம்கில்லர் சோப் எல்லாவித சர்ம வியாதிகளையும் குணப்படுத்து மென்பதற்கு சந்தேகமில்லை. விலை 3 சோப் அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. **2—8—0.**

தாபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம் (3 சோப்புக்கு, குறைந்து வி. பி. யில் அனுப்ப முடியாது)

விலாசம் :—பி. எஸ். பொம்மையா அண்ட் கோ.,
தபால் பெட்டி 198, மதருஸ்.

---

## சு க சா த ன ம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது உடனே எழுதுங்கள்.

வைத்திய அனுபவங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்மந்தமான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய ரகஸ்ய·ரத்னம் உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலை யில்லை, தபாற் செலவில்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ., டிப்போ, 165, பிராட்வே,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

# கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்க மானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முத லிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகல முள்ளது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | நெ. | விலை ரூ. | 11 | முதல் | 15 | வரை. |
| 2 | ,, | ,, | 10 | ,, | 11 | ,, |
| 3 | ,, | ,, | 8½ | ,, | 10 | ,, |

## கம்பளி சட்டை:

முறுக்கு கம்பளி நூலால் செய்யப் பட்டது. குளிரு க்கு அடக்கமான து. இதை அணி ந்து கொண்டால் சீதளம் அண்டா து. தோட்டங்க ளில் இருப்பவர்க ளுக்கு அவசியமா னது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

## TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொ ள்ள உதவும். கலர் கிரே, கருப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகல,
ரூ. 4½, 5.

## கம்பளி ஆஸனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½.
உசத்தி ரூ. 3½ முதல்
5 வரை.

## LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

## மடி தா வ ளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர் கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக் கொள்ள உபயோக முள்ளது.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | முழம் | 24 | இஞ்சு | அக. ரூ. | 2 | | 10 | முழம் | 40 | இஞ்சு | அக. | ரூ. | 7 |
| 6 | ,, | 24 | ,, | ,, | 2½ | | 16 | ,, | 40 | ,, | | ,, | 12 |
| 7 | ,, | 29 | ,, | ,, | 3 | | | | | | | | |
| 8 | ,, | 40 | ,, | ,, | 5½ | | 18 | ,, | 40 | ,, | | ,, | 14 |

## கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

காசி.

# PRINTING

## VEST & Co.,

**14, Mount Road, MADRAS.**

---

## வெஸ்ட் அண்டு கோ,

(ஸ்தாபித வருஷம் 1841)

---

## அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு, குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
வெஸ்ட் அண்டு கோ,
14, மவுண்ட் ரோட்,
சென்னை.



தமிழ்நாடு
21033
சென்னை 600 008

# ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்டடு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட ரூ. 2-8, 2-12, 3, 3-8.

## பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44″ ரூ. 6, 6-8. 8 கெஜம் 44″ ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44″ ... ... ரூ. 7, 8.

## வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

## கோகர்ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

## கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.

## கமலாவும்! தீபாவளி! ருக்மணியும்!

கமலா :—தீபாவளி வரப்போகிறதே நீ என்ன வாங்கப் போகிறாய்?

ருக்மணி :—அதைப் பற்றித்தாண்டி யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ என்ன வாங்கப் போகிறாய்?

கமலா :—வருடமெல்லாம் நம் நாட்டுப் புடவைகளுக்குத் தான் பணத்தைக் கொட்டி வருகிறோம். 'சில்க் ஹவுஸில்' நாகரீகமான புடவைகள், தவைத்துக் கட்டுவதற்கு உபயோகமாயும், நீடித்து உழைக்கக் கூடியதாயும், நாணய முள்ளதாயும் இருக்கிறதாக சுதேச மித்திரனில் படித்தேன். மைலாப்பூர் ராஜம்மாளும் சில்க் ஹவுஸில் வாங்கினதாயும் அழகாயிருக்கிறதாயும் சொன்னாள்.

ருக்மணி :—கமலா, வாடி இன்றே 'சில்க் ஹவுஸுக்குப்' போவோம்.

கமலா :—காசி, 'சில்க் ஹவுஸ்,' கே. எஸ். முத்தையா கம்பெனியார் சொந்தத்தில் தயாரித்து வருவதால், பல ரகங்களை 'சில்க் ஹவுஸில்' தெரிந்தெடுக்கலாம்.

"பணத்தைப் போட்டாலும் பட்டுக்கே போடவேண்டும்" என்ற முது மொழியைச் சொல்லி கொண்டு சென்னை, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி, சில்க் ஹவுஸ் பிரா ஆபீசுக்குப் போய் வாங்கினார்கள்.

Printed by M. A. Nellayappar at VEST & CO., Madras and Published by K. S. Sundram